Registered as a news paper.　　பக்கங்கள்: பன்னிரண்டு　　விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்,
இழந்த பற்களுக்கு நிகரான சங்குப்பற்களைக் கட்டிக்கொள்ளவும்,
பொருத்திக்கொள்ளவும், உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்



எரிக் கணேஷ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-222 2486
கிளை நிறுவனங்கள்
இல 91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.
இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.


மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 17 (03.09.2004) வெள்ளிக்கிழமை இதழ்:336

## தொழிலாளருக்கிடையிலான பிரச்சினையைப் பயன்படுத்தி

# புலிகளுக்கும் மக்களுக்கும் இடையே பிளவினை ஏற்படுத்துவதற்கு முயற்சி!

### கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை

(பளை)

**இழுவை மீன்பிடித் தொழிலாளர்களுக்கும் கரையோர சிறுதொழில் செய்பவர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கு ஒன்றின் விளைவான சம்பவத்தைப் பயன்படுத்தி குருநகர் மீன்பிடித் தொழிலாளர்களின் பேரில் தேசத்துரோகிகள் மிக மோசமான பிரசாரத்தின் மூலம் மக்களைக் குழப்ப முயற்சித்தனர். இத்தகைய குழப்பங்களை ஏற்படுத்தி விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையே பிளவுகளை ஏற்படுத்த தேசவிரோத சக்திகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இடமளிக்கக் கூடாது என கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.**

இந்த நிலைமைகளைத் தெளிவு படுத்தும் வகையில் குருநகர் இழுவை மீன்பிடித் தொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகள், பூநகரி மீன்பிடித் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

பளையில் நேற்று நடைபெற்ற இந்த சந்திப்பில் கலந்துகொண்டு விளக்கமளித்த அவர் மேலும் கூறுகையில் -

பூநகரி பாலாவி கிராமக் கடற்பகுதியில் குருநகரில் இருந்து வந்த இழுவை மீன்பிடிப் படகு ஒன்று நடைமுறைகளை மீறிக் கரையோரத்தில் இழுவைத் தொழில செய்ய முற்பட்டபோது, கரையோர சிறுதொழில் மீனவர்களுக்கும் இழுவைப் படகில் வந்தவர்களுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது.

இதனையடுத்து போராளிகளிடம் பாலாவி மீனவர்கள் முறை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி குடாநாட்டுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்தகொட்டேகொட யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளார்.

இவர் நேற்று தனது விஜயத்தை ஆரம்பித்ததாக இராணுவத் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன. நேற்று இவர் பலாலி, காங்கேசன்துறை உள்ளிட்ட இராணுவ முகாம்களுக்கு விஜயத்தை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இராணுவத் தளபதி முகமாலை இராணுவ சோதனைச் சாவடிப் பகுதிக்கும் விஜயம் செய்து நிலைமையை ஆராயத் திட்டமிட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் சாந்தகொட்டேகொட, பதவியேற்றபின் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

இராணுவத் தளபதியின் இந்த விஜயம் வழமையானதொன்றென இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இராணுவத் தலைமையகத்தை படம்பிடித்ததாகக் கூறி யாழ். இளைஞர் கைது!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தைப் படம் பிடித்ததாகக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது -

இல. 46, பெரிய அம்மன் கோவில், வண்ணை வடக்கு, நல்லூர் என்ற முகவரியைச் சேர்ந்த 22 வயதான யோகராசா நிமலன் என்ற இளைஞரே கைதானவராவார்.

## திருமலையில் நேற்று ஹர்த்தால்; கண்காணிப்புக்குழு முன் மறியல்!

### வட. கிழக்கு சிங்கள அமைப்பு ஏற்பாடு

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு சிங்கள பௌத்த அமைப்பினால் நேற்று திருகோணமலையில் ஹர்த்தால் ஒன்று அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த மாதம் 10 ஆம் திகதி குச்சவெளி கல்லம்பத்தை என்னும் இடத்தில் வைத்து புலிகளால் பிடிக்கப்பட்ட இரண்டு ஊர்காவற் படையினரை விடுவிக்கக்கோரியே



(கொழும்பு)

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தைப் படம் பிடித்ததாகக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது -

இல. 46, பெரிய அம்மன் கோவில், வண்ணை வடக்கு, நல்லூர் என்ற முகவரியைச் சேர்ந்த 22 வயதான யோகராசா நிமலன் என்ற இளைஞரே கைதானவராவார்.

கொழும்பு இராணுவத் தலைமையக பிரதான வாயிலுக்கு அண்மையாக நின்று, இராணுவத் தலைமையக வளாகத்தைப் படம்பிடித்துக் கொண்டிருந்த வேளையிலேயே தாம் (12 ஆம் பக்கம் பார்க்க)

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு சிங்கள பௌத்த அமைப்பினால் நேற்று திருகோணமலையில் ஹர்த்தால் ஒன்று அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த மாதம் 10 ஆம் திகதி குச்சவெளி கல்லம்பத்தை என்னும் இடத்தில் வைத்து புலிகளால் பிடிக்கப்பட்ட இரண்டு ஊர்காவற் படையினரை விடுவிக்கக்கோரியே இந்தக் ஹர்த்தல் மேற்கொள்ளப் பட்டது.

நகரின் மத்தியில் பெரும்பான்மையினர் வாழும் பகுதிகளில் கடைகள் மூடப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துக் குறைவாக இருந்தது.



தமிழ்ப்பிரதேசங்கள் வழமை போன்று இயங்கின. தனியார் பேருந்து, அரச பேருந்துகள் வழமை (12 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோருக்கான உதவிகள் குறித்து

# யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளை தமிழ்ச்செல்வன் சந்தித்துப் பேச்சு!



(கிளிநொச்சி)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும், இலங்கைக்கான யு.என்.எச்.சி.ஆர். வதிவிடப்பிரதிநிதி நீல்ஸ்றைட் தலைமையிலான குழுவினருக்குமிடையில் நேற்றுக் கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் சந்திப்பொன்று இடம் பெற்றது.

இந்தச்சந்திப்பில் - உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் நிலைகள் அவர்களுக்கான உதவிகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதில், உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் ஏற்கனவே மீளவும் குடியமர்தல் என்ற திட்டத்தின் கீழ் குடியமர்ந்துள்ளனர். ஆனால், அவர்களுக்கான எந்த விதமான கொடுப்பனவுகளோ நட்டஈடுகளோ முழுமையாக இதுவரை வழங்கப்படவில்லை.

அத்துடன், படையினர் ஆக்கிரமித்துள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் எனப் பிரகடனப்படுத்திய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர் போட்டிப் பரீட்சை முடிவுகள் இரு வாரங்களில்!

(கொழும்பு)

ஆசிரியர் நியமனத்துக்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் இரண்டு வாரங்களுக்குள் வெளிவரும் என, தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக, ஆயிரம் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை கடந்த ஜுலை மாதம் நடைபெற்றது. இந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் இன்னும் இரு வாரங்களில் வெளியிடப்படவுள்ளன.

இது குறித்து தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.மகாசிவம் மேலும் தெரிவித்ததாவது -

இந்தப் போட்டிப் பரீட்சையின் விடைத்தாள்கள் யாவும் திருத்தப்பட்டுவிட்டதாகவும், இந்தப் பெறுபேறுகள் யாவும் கல்வி அமைச் (12 ஆம் பக்கம் பார்க்க)


எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# யாழ்.செயலகத்தின் ஏற்பாட்டில் நடமாடும் அலுவலக சேவை

ஜே/78 - அத்தியடி, ஜே/79 - சிறாம்பியடி, ஜே/80 - பெரிய கடை ஆகிய கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு வாக்காளர் இடாப்பில் பெயர் சேர்த்தல், தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுத்தல் போன்ற சேவைகளுக்கான நடமாடும் சேவையொன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரி நிறுவனத்தின் மண்டபத்தில் நடைபெறும்.

சம்பந்தப்பட்டவர்கள், தங்கள் வசமுள்ள ஆவணங்களுடன் சமுகமளித்து இந்தச் செயன்முறையின் உச்சப் பயன்பாட்டை பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் பிரதேச செயலர் கேட்டுக்கொள்கிறார். ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# சாரதியின் சாதுரியத்தால்; பயணிகள் உயிர் தப்பினர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை வீதியில் - பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த வட.பிராந்திய போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியின் சில்லு ஒன்று திடீரெனக் கழன்று ஓடியது.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் புத்தூர் சந்திப் பகுதியிலிருந்து காலை 7.45 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்வண்டியே இவ்வாறு விபத்திலிருந்து தப்பியது.

திடீரென பஸ்ஸின் சில்லு ஒன்று கழன்று ஓடியபோதும், சாரதியின் சாதுரியத்தால் பயணிகள் ஆபத்து எதுவுமின்றிக் காப்பாற்றப்பட்டனர்.(110)


## பதினைந்து ஆண்டு நிறைவின் நினைவலைகள்

அன்னையின் மடியில் 13 - 01 - 1926



அமரர்

அன்னியன் அழிப்பில் 21 - 08 - 1989

### திரு. முருகன் சின்னத்துரை

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் கல்வியமைச்சு)

உங்கள் ஆத்ம சாந்தியை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

'குமரன் கோட்டம்'
அல்வாய் வடமேற்கு,
அல்வாய். (925)

அன்புடன்,
மனைவி, மகள்,
பேரமழலைகள்.



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றம் நடாத்திய அழகெழல் போட்டி – 2004

### பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்வுகளும் கண்காட்சியும்

**காலம்:** 04.09.2004 சனிக்கிழமை காலை 9 மணி
**இடம்:** கல்லூரி புதிய மண்டபம்

தலைவர்
**திரு.சி.சிவானந்தராசா**
(முகிழ்நிலை ஆசிரியர்)

பீடாதிபதி
**கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்**
(யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

பிரதம விருந்தினர்
**திருமிகு ஆர்.தியாகலிங்கம்**
(செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம்)

சிறப்பு விருந்தினர்கள்
**திரு.க.பாலசுப்பிரமணியம்**
(உதவிப் பொது முகாமையாளர் - இலங்கை வங்கி, வடபிராந்தியம்)
**கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம்**
(தலைவர், நாடக அரங்கக் கல்லூரி)

இணைப்பாளர்
**திரு.க.ரட்ணேஸ்வரன்**
(நுண்கலைத்துறை, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)

*அழகில் எழுவை*

❖ மங்கள விளக்கேற்றல் ❖ இறைவணக்கம்
❖ தமிழ்த்தாய் வாழ்த்து ❖ அழகெழல் கீத நடனம்
❖ வரவேற்புரை திரு.க.ரதீஸ்வரன் (முகிழ்நிலை ஆசிரியர்)
❖ தலைமையுரை - தலைவர்
❖ ஆசியுரை - பீடாதிபதி
❖ 'தூரிகைத்தூறல்' வெளியீடு
❖ தூரிகைத் தூறலின் சாரலில் திரு.பா.தனபாலன் (உப பீடாதிபதி, கல்வியும் தரமேம்பாடும்)
❖ வாழ்த்துரை கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம்
❖ இணைப்பாளர் உரை
❖ சிறப்பு விருந்தினர் உரை
❖ பிரதம விருந்தினர் உரை
❖ பரிசளிப்பு விழா
❖ கலை நிகழ்வுகள் (அழகெழல் - 1 ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்ற அரங்க நிகழ்வுகள்)
❖ நன்றியுரை - ஜெ.ஜெகரூபன் (முகிழ்நிலை ஆசிரியர்)
❖ போட்டியின்போது தெரிவு செய்யப்பட்ட ஓவியங்கள் காட்சிப்படுத்தப் படும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

(சி/3042) நுண்கலை மன்றம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.


## பிரிவுபசாரவிழா

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட இறுதி வருட மாணவர்களுக்கான பிரிவுபசாரவிழா, நாளை சனிக்கிழமை மாணவர் பொது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பிரிவுபசார விழாவில்-அனைத்து நான்காம் வருட மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## அவசர கலந்துரையாடல்

இரண்டாவது தொகுதி பட்டதாரிகளின் பெயர்ப்பட்டியலில் பெயர் இடம்பெறாத உயர் தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவபட்டதாரிகள் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று மாலை மூன்று மணிக்கு உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் இடம்பெறவுள்ளதால், அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு யாழ். மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

## அகம் - புறம் காண்பியற் கலைக் கண்காட்சி

சேது காண்பியற் கலைக்கான கற்கைப் புலமும் தீர்த்த சர்வதேச கலைஞர்களின் கூட்டிணைப்பும் இணைந்து நடத்தும் அகம் - புறம் என்ற காண்பியற் கலைக்கண்காட்சி நாளை மறுதினம் யாழ்ப்பாண பொது சன நூலகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக்கண்காட்சியை எதிர் வரும் திங்கள் முதல் ஒக்ரோபர் 5 ஆம் திகதிவரை நூலக நேரத்தில் பார்வையிடலாம் இந்தக் கண்காட்சியில் புகழ்பெற்ற ஓவியர்களின் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### உலக தாவர உணவு தினம்

வெள்ளிக்கிழமை விரதநாள் - உலக தாவர உணவுத்தினமாகவும், சமாதானமும், சாந்தியும் வழிகாட்டுக.

போயா விடுமுறை தினத்தில் இலங்கை அரசால் பின்பற்றும் முறைகள் வெள்ளிக்கிழமைகளிலும் பின்பற்றுவதற்கு வழிகாட்டுக.

இந்து அரச ஊழியர்கள் இணையம் - வே.கெ.தனபாலன், இணைப்பாளர், வவுனியா.

### தேவை

ஒப்செற் மெசின் மெயின்ரர் (Camada) தேவை. இயக்கத் தெரிந்தவர்களும், தெரியாதவர்களும். பழகுபவர் களும் 06.09.2004 அன்று நேரில் சமுகமளிக்கவும். திருக்கணித பதிப்பகம், டச்சு வீதி, சாவகச்சேரி. (C/3040)


### ஆட்டோ சாரதி தேவை

சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வரவும். M.G.M 777 K.K.S Road, Jaffna. (C/3025)

தேசிக்காய் ஊறுகாய், வெள்ளைப்பூடு ஊறுகாய், மோர் மிளகாய் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமது கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல: 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/3022)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு



விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த

**மதுர**

(முக்கிய அறிவித்தல்)
காட்சிநேரம் மாற்றப்பட்டுள்ளது
10.00, 2.00, 6.00, 9.00 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்
(சி-2725)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

சேரன், சிநேகா நடித்த

**ஆட்டோகிராப்**

காட்சிநேரம்: 11.00.2.45.6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) Strike Force
(சி-2723)

**நாகம்ஸ்** சுன்னாகம்

கமல், சிநேகா, பிரபு நடித்த



**வசூல்ராஜா MBBS**

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)


## திறப்பு விழா

புத்தூர் கிழக்கு அரசினர் மருந்தகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று பிற்பகல் 1.18 மணிக்கு நடைபெறவுள்ளது.

புத்தூர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உபதலைவர் வே. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில், பிரதமவிருந்தினராக சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் வைத்திய காலநிதி கா.த.சிவபாதம் கலந்துகொள்ளவுள்ளார். (110)

## மலர் வெளியீடு ஒத்திவைப்பு

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இன்று காலை பத்து மணிக்கு நடைபெறவிருந்த நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழா தவிர்க்கமுடியாத காரணத்தால், பிற்போடப்பட்டுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்

எனவே, இந்த மலர் வெளியீடு தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.


## தவறிவிட்டது

101 தொடரிலக்கமுடைய மோட்டார் சைக்கிளுக்குரிய காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள் அடங்கிய பொலித்தீன் பை ஒன்று செல்வச்சந்நிதி ஆலயத்துக்கும் ஏழாலை வடக்கிற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

மா.ஜெயசீலன்,
ஸ்ரீ துர்கா இரும்பகம்,
இல : 186, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம். (922)

T.P : 060 2122965
0777 432188

ச.மோகனதாஸ்,
S.M.T பந்தல் சேவை,
அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.


## நமது ஈழநாடு

### இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிக்கான விதிகள்

#### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

#### ✪ புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 X 4 அங்குலம் ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரவாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

#### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

மத்திய பிரிவு- க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.
மேற்பிரிவு - அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள்
அனுப்ப வேண்டிய முகவரி:- நமது ஈழநாடு - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# நோர்வேயை வெளியேற்றிவிட்டு இந்தியாவை அழையுங்கள்

## ஹெல உறுமய கோரிக்கை

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேயை வெளியேற்றிவிட்டு, இந்தியாவை அழைக்கவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.

இந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான வண.அத்துரலிய ரத்தின தேரோ செய்திநிறுவனமொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

சமாதானப் பேச்சுவார்த்தையில் நோர்வே அனுசரணையாளர்களல்ல. அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார்கள். நாம் நோர்வேயின் அனுசரணையாளர் நடவடிக்கையில் எவ்வித நம்பிக்கையும் வைக்கவில்லை.

எனவே, நோர்வேயையும், கண்காணிப்புக் குழுவினரும் நாட்டை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும்.

விடுதலைப் புலிகள் போருக்கான ஆயுததளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதியுதவியையும் நோர்வே வழங்குவதாகவும் அவர் இந்தப் பேட்டியில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# இனப்பிரச்சினையைத் தீர்க்க அதிகாரப் பரவலாக்கல் அவசியம்

## பேராசிரியர் விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சனைக்குத் தீர்வாக அதிகாரப் பரவலாக்கல் திட்டமே உள்வாங்கப்படவேண்டிய சூழல் தற்போது நிலவுவதாகவும், அரசு இதைப் புரிந்துகொண்டு, உடனடியாக அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிப்பது அவசியம் என்று பேராசிரியர் விதாரண கருத்துக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள திட்டத்தையும், அரசு தயாரிக்கும் இதற்கு நிகரான இன்னுமொரு திட்டத்தையும் முன்வைத்து, அதிகாரப் பரவலாக்கல் முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம்.

ஆக்கபூர்வமான பிராந்திய அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலமே, தற்போதைய சூழ்நிலையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படலாம் என்பதை அரசும், சிங்கள மக்களும் புரிந்து கொள்வது அவசியமென்றும், இரு பெரும்பான்மைக் கட்சிகளும் இணைந்து இவ்விடயத்தில் தீர்வு காண ஒத்துழைப்பது அவசியமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தவுள்ளோம்!

## பிரான்ஸ் உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

பிரான்ஸ் நாட்டின் உயர் ஸ்தானிகர் கொயோல்ட்டி மெஸ்சோனா, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம் மறறும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரை கொழும்பில் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

இதன்போது ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் வெளியிட்ட இலங்கை தொடர்பான அறிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகள் மாத்திரமே கொலைகளில் ஈடுபடுவதாகக் கூறியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

பேச்சுவார்த்தைகளை இடைக் காலத் தன்னாட்சி அடிப்படையில் ஆரம்பிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர். இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் உட்பட்ட உலகநாடுகள் வலியுறுத்தல் விடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் தமிழரசுக் கட்சியினர் இந்த சந்திப்பின்போது முன்வைத்தனர்.

சிறுவர்களைப் படைகளில் சேர்ப்பது தொடர்பாகத் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது குற்றம் சுமத்தப்படுகின்றபோதும், அவ்வாறான நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொள்ளவில்லை எனவும் அவர்கள் பிரான்ஸ் நாட்டு உதவி உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்தனர்.

# புலிகள் - படைத்தரப்பு சந்திப்பு அடுத்த வாரத்துக்கு ஒத்திவைப்பு

கிழக்கில் அரசபடையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும்இடையில் இன்று நடைபெறவிருந்த சந்திப்பு அடுத்த வாரத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

நீண்ட காலமாக மட்டக்களப்பில் இரு தரப்பினருக்கும் இடையிலான சந்திப்புக்கள் நடைபெறவில்லை. இப்போது தொடரும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு படையின்ரும் புலிகளும் சந்தித்துப் பேசி தீர்வுகாணவேண்டும் என போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வலியுறுத்திவந்தது.

கடந்த செவ்வாயன்று மட்டக்களப்புக்கு விஜயம்செய்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ் ஹொவ்டே, இராணுவ அதிகாரிகளுடனும், விடுதலைப்புலிகளின் தளபதிகளுடனும் பேச்சுநடத்தியபின்னர் இருதரப்பும் பேச்சு நடத்துவதற்கு இணக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்.

இன்று இந்தச் சந்திப்பு இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்தச் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டு அடுத்த செவ்வாய்கிழமையே நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறவிருந்த சந்திப்புக்கு இராணுவத்தரப்பில் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தலைமை வகிப்பார் என அறிவிக்கப்பட்டிருந்து.

ஆனால், மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் வஜிர குணவர்த்தன தான் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு வசதியாக, அடுத்தவாரம் இந்தச் சந்திப்பை நடத்தும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்கவே எதிர்வரும் செவ்வாய்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஒஸ்கார் சொல்நெஸ் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தரப்புக் குழுவிற்கு மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளப்தி கேணல் ரமேஷ் தலைமை வகிப்பார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# போர்நிறுத்த மீறல்களை வெளிக்கொண்டுவரவேண்டும்

## கண்காணிப்புக்குழுவுக்கு, ரட்ணசிறி கோரிக்கை



அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட போர்நிறுத்த உடன்படிக்கையை இரு தரப்பினரும் மீறினால் அதுபற்றி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பொறுப்பாகும்.

இவ்வாறு புத்தசாசன அமைச்சரும, பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார். நேற்றுமுன்தினம் நாட்டின் பௌத்த தூதுக் குழுவினர், ரட்ணசிறி விக்கிரமநாயக்கவைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டில் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளின் போது பல்வேறு சந்தர்ப்பங்களில் போர்நிறுத்த மீறல்கள் இடம்பெற்றுவருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் போர்நிறுத்த உடன்படிக்கையை மீறியுள்ளனர். இதன்போது இருதரப்பினரும் மீறப்பட்ட சம்பவங்கள் குறித்து மக்களுக்கு நேரடியாகத் தெரியப்படுத்தவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மிலேனியம் சிற்றி உளவாளி கொலை; மனைவி, மைத்துனி தடுப்புக்காவலில்!

இராணுவ உளவாளியான திஸ்ஸ வீரசிங்கம் துஸ்யந்தனைக் கொலை செய்வதற்கு தாங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உதவியதாக, அவரது மனைவியும், மைத்துனியும் ஒப்புக்கொண்டதாகப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கங்கொடவில நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

திஸ்ஸவீரசிங்கத்தின் மைத்துனி, அவரது மற்றொரு மனைவி எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

மிலேனியம் சிற்றி வீட்டுத் தொகுதியிலிருந்து செயற்பட்ட இராணுவ உளவாளியான ரமேஷ், கடந்த 28 ஆம் திகதியன்று கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டிருந்த ரமேஷின் மனைவியான சிவலிங்கம் சிவசோதி என்பவரும், மைத்துனியான மட்டக்களப்பு காந்திநகரில் வசிக்கும் ராஜேந்திரம் கீதாஞ்சலி என்பவரும் நேற்றுமுன்தினம் கங்கொடவில நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, எதிர்வரும் 15 ஆம் திகதிவரை அவர்களைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு மேலதிக மாவட்ட நீதிபதி பத்மினி ரணவக்க உத்தரவிட்டுள்ளார். கொலைச் சம்பவத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தாம் உதவியதாக கவிதாவும் ஒப்புக்கொண்டுள்ளதாகப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரியப் படுத்தியுள்ளனர். (தே)

# வடக்கு - கிழக்கைப் பிரிக்க நினைப்பது தமிழ் - முஸ்லிம் உறவைப் பிரிக்கும் செயல்

## அரியநேந்திரன் எம்.பி.தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரிக்க நினைப்பது என்பது தமிழ், முஸ்லிம் உறவைப் பிரிக்க நினைக்கும் செயலாகவே கருத முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கல்முனையில் ஜே.வி.பியின் பின்புலத்துடன் நடாத்தப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்றுகோரி நடத்தப்பட்ட கூட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்யைில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த 1957 பண்டா செல்வா ஒப்பந்தம் தொடக்கம் 1987 இலங்கை இந்திய ஒப்பந்தம் வரையும் வடக்கு - கிழக்கு இணைப்பு வலியுறுத்தப்பட்டுள்ளது. தற்போது விடுதலைப் புலிகளால் எழுத்துவடிவில் அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி யோசனை நகலில் இது வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு இணைந்த சுயநிர்ணய உரிமைக்காக இன்று 17640 மாவீரர்களும் சுமார் எண்பதாயிரம் பொதுமக்களும் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். இவைகளையெல்லாம் மறந்து அற்பசொற்ப அரசியல் லாபம்தேடும் சிலரால் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிராகப் பிரசாரம் செய்வது மீண்டும் யுத்தத்துக்கே இட்டுச்செல்லும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### வெளிவாரிப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன

அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் வெளிவாரிப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் இடம்பெறும் அனைத்து பல்கலைக்கழகங்களினதும் கல்விசாரா ஊழியர்களின் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தால் இந்தநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பரீட்சைகள் பேராதனை, களனி போன்ற பல்கலைக்கழகங்களில் பிற்போடப்பட்டுள்ளதாகவும், யாழ்.பல்கலைக்கழகத்தில் இந்தப் பரீட்சைக்குரிய திகதி வேறொரு காலத்தில் வருவதால் இந்தக் சிக்கல்கள் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# நாட்டின் பாதுகாப்பைப் பலவீனப்படுத்தி புலிகள் மீண்டும் யுத்தத்துக்குத் தயாராகின்றனர்

## முன்னாள் பாதுகாப்பு செயலாளர் வணசிங்க

இலங்கையின் பாதுகாப்பு நிலவரம் நாளுக்கு நாள் நலிவடையும் நிலைக்கு வந்துள்ளது. எனது அறிவுக்கு எட்டியவகையில் விடுதலைப் புலிகள் பாதுகாப்பு நிலவரத்தைப் பலவீனப்படுத்தி மீண்டும் யுத்தத்தை நோக்கிச் செல்வதையே விரும்புகின்றனர் என முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹமில்ரன் வணசிங்க தெரிவித்தார்.

ஆரம்பத்திலிருந்தே போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையிலிருந்தும் புலிகள் அதற்கு ஏற்ற விதத்தில் நடந்துகொள்ளவில்லை.

புலிகள் தொடர்ச்சியாகப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிச் செயற்பட்டுவருகின்றமை பகிரங்க இரகசியமாகும். அவர்கள் 2 ஆயிரம் தடவைகளில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியிருந்ததாக சில ஊடகங்கள் செய்திவெளியிட்டிருந்தன.

கடந்த வாரங்களில் மட்டக்களப்பில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக இராணுவம் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலருக்குப் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. இதற்கும் மேலாக கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் இராணுவ உளவாளிகள் எனக்கூறித் தனிப்பட்டவர்கள் பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவைகள் அனைத்தின் மூலமும் புலிகள் அமைப்பு கடந்த காலத்தில் செய்ததுபோன்று இந்தத் தடவையும் யுத்தத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

எனவே அரசும் - இராணுவத்தினரும் போருக்கு முகம் கொடுக்க எப்போதுமே தயார் நிலையில் இருக்க வேண்டும்.

இப்பொழுது அரசு செய்யவேண்டியது, போர்நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்த நோர்வே அரசுடன் கலந்துரையாடி அதனை மேலும் பலமுள்ளதாக ஆக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேண பொலிஸாரின் உதவி பெறப்படவுள்ளது

## தேசிய பாடசாலைகளின் பணிப்பாளர் தெரிவிப்பு

பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேண பொலிஸாரின் உதவி பெறப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது என, தேசியப் பாடசாலைகளின் பணிப்பாளர் எச்.ஜி. லியகமகே தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் அதிகரித்துவரும் ஒழுக்கச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு, பொலிஸாரைப் பயன்படுத்துவதே சிறந்தவழியாகும். முதற்கட்டமாக கொழும்பிலும், பின்னர் ஏனைய பிரதேசங்களிலும் இந்த நடைமுறை பின்பற்றப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### நட்வெஸ்ட் தொடர்

# முதலாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி படுதோல்வி!



(நொட்டிங்காம்)


இந்திய - இங்கிலாந்து அணிகள் பங்கேற்கும் நட்வெஸ்ட் ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

காயம் காரணமாக இந்திய அணியில் டெண்டுல்கர் ஆடவில்லை. அவருக்குப் பதிலாக ரோகன் கவாஸ்கர் அணியில் இடம்பெற்றார்.

இங்கிலாந்து கப்டன் மைக்கல் வோகன் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று இந்திய அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார். தொடக்க ஆட்டக்காரர்களாக ஷேவாக்கும், கப்டன் கங்கூலியும் களமிறங்கினார்கள்.

இங்கிலாந்து வீரர்களின் சிறப்பான பந்துவீச்சினால் இந்திய அணியின் ஆரம்பமே ஆட்டங்கண்டது. அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் 12 பந்துகளில் 4 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஹோக்கின் பந்தில் வோகனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதைத் தொடர்ந்து வி.வி.எஸ். லக்ஷ்மன், கங்கூலியுடன் இணைந்தார். இருவரும் நிதானமாகவும், அதே நேரத்தில் நேர்த்தியாகவும் அடித்து ஆடினர். இதனால் இந்திய அணி ஆரம்பசரிவிலிருந்து மீளும் அறிகுறி தென்பட்டது. ஆனால் அந்த நல்ல அறிகுறி அதிக நேரம் நீடிக்கவில்லை.



அணி 62 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கங்கூலி 24 ஓட்டங்களுடன் வோர்ப்பின் பந்தில் ஜோன்சிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து சிறிது நேரத்தில் லக்ஷ்மன் 29 ஓட்டங்களுடன் வோர்ப்பின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து யுவராஜ் சிங் - ராவிட்டுடன் ஜோடி சேர்ந்தார். ராவிட் 13 ஓட்டங்களுடன் வோர்ப்பின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்த சில ஓவர்களில் யுவராஜ்சிங் ரன் அவுட் ஆனார். இதனால் 18.2 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 89 ஓட்டங்கள் என்ற பரிதாப நிலையில் இந்திய அணி இருந்தது.

6 ஆவது விக்கெட்டுக்கு ரோகன் கவாஸ்கர் - முகமட் கை.ஃப்புடன் இணைந்தார். இந்த ஜோடி அணியின் நிலையை எண்ணி நிதானமாக ஆடியது. இதனால் ஸ்கோர் மெதுவாக உயர்ந்தது.

சமீபகால ஆட்டங்களில் தொடர்ந்து மோசமாக ஆடிவந்த இளம் வீரர் கை.ஃப் - இந்த ஆட்டத்தில் நிலைத்து நின்று ஆடினார்.

ஸ்கோர் 129 ஐ எட்டிய நிலையில் கை.ஃப் - ரோகன் கவாஸ்கர் ஜோடி பிரிந்தது. 20 ஓட்டங்களை



எடுத்திருந்த ரோகன், பிளின்ரொப்பின் பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த பதான் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, சிறப்பாக ஆடிய கை.ஃப் அரைச்சதம் அடித்தார். 79 பந்துகளைச் சந்தித்த அவர் 4 பவுண்டரிகளுடன் 50 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஹர்மிசன் பந்தில் ஆட்டமிழந்தார்.

கை.ஃப் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து களம் புகுந்த பாலாஜி, நெஹ்ரா ஆகியோர் ஓட்டம் எதுவும் எடுக்காமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் 43.5 ஓவர்களில் இந்தியா 170 ஓட்டங்களுடன் சுருண்டது.

இங்கிலாந்து தரப்பில் ஹர்மிசன், வோர்ப் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், ஹோக், பிளின்ரொப், ஜைல்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

171 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் இங்கிலாந்து துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக டிரெஸ்கோதிக்கும், சோலங்கியும் களம்புகுந்தனர்.

குறைந்த ஓட்டங்களே வெற்றி இலக்கு என்பதால், இங்கிலாந்து அணியினர் தொடக்கம் முதலே எந்த வித பதற்றமுமின்றி ஆடினர். அணி 63 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, தொடக்க ஜோடியை பாலாஜி பிரித்தார். 33 ஓட்டங்கள் எடுத்திருந்த டிரெஸ்கோதிக், பாலாஜியின் பந்தில் யுவராஜிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த கப்டன் வோகன் ஓட்டமெதுவும் பெறாமலே பாலாஜி பந்தில் ஆட்டமிழந்தார். 2 விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரிந்தன. பின்னர் வந்த வீரர்கள் சுதாரித்துக் கொண்டு ஆடினர்.

3 ஆவது விக்கெட்டுக்கு சோலங்கியுடன் ஸ்ரரஸ் இணைந்து ஆடி



னார். சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த தொடக்க வீரர் சோலங்கி அரைச்சதம் அடித்தார். 74 பந்துகளைச் சந்தித்த அவர் 8 பவுண்டரிகளுடன் அரைச்சதத்தைப் பூர்த்திசெய்தார். 52 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் சோலங்கி, பதான் பந்தில் ஆட்டமிழந்தார்.

சோலங்கியின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து ஸ்ரரசுடன் பிளின்ரொப் இணைந்தார். இந்த ஜோடி இங்கிலாந்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது. 32.2 ஓவர்களில் இங்கிலாந்து 3 விக்கெட் இழப்புக்கு 171 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஸ்ரரஸ் 41 ஓட்டங்களுடனும், பிளின்ரொப் 34 ஓட்டங்களுடனும் (23 பந்துகளில் 1 பவுண்டரி, 3 சிக்ஸர்) ஆட்டமிழக்காமல் ஆடிக்கொண்



டிருந்தனர். ஆட்டநாயகன் விருது 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இங்கிலாந்து வீரர் வோர்ப்புக்கு வழங்கப்பட்டது.

3 ஒருநாள் போட்டிகள் தொடரில் இங்கிலாந்து தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான முதல் போட்டியில் தோற்றதால் இந்தியா நெருக்கடியில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான 2 ஆவது போட்டி இன்று நடைபெறவுள்ளது.

# இங்கிலாந்து வீரர் ஹர்மிசன் ஹட்ரிக்!



இந்தியாவுக்கு எதிரான நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் ஹர்மிசன் ஹட்ரிக் சாதனை படைத்தார். கை.ஃப், பாலாஜி, நெஹ்ரா ஆகியோரது விக்கெட்டுகளைத் தொடர்ந்து 3 பந்துகளில் கைப்பற்றி அவர் ஹட்ரிக் சாதனை புரிந்தார்.

ஒருநாள் போட்டியில் ஹட்ரிக் சாதனை நிகழ்த்திய 2 ஆவது இங்கிலாந்து வீரர் மற்றும் 16 ஆவது சர்வதேச வீரர் என்ற பெருமையை ஹர்மிசன் பெற்றார்.

வசீம் அக்ரம், சக்லைன் முஸ்தாக், வக்கார் யூனுஸ், அக்யூப் ஜாவித், ஜலாலுதீன், முகமட் சமி (பாகிஸ்தான்), பிரட் லீ, புரூஸ் ரீட், ஸ்ருவர்ட் (அவுஸ்ரேலியா), சேத்தன் சர்மா, கபில்தேவ் (இந்தியா), டேனி மொரிசன் (நியூஸிலாந்து), சமிந்த வாஸ் (இலங்கை), அன்டர்சன் (இங்கிலாந்து), பிரெண்ட் (சிம்பாப்வே) ஆகியோர் ஹட்ரிக் சாதனை புரிந்துள்ளனர். இதில் அக்ரம், சக்லைன், வாஸ் ஆகியோர் தலா இரண்டு முறை இந்தச் சாதனையைப் படைத்துள்ளனர்.




# தங்கத்தை இழந்த ஹங்கேரி வீரர் சர்வதேச ஒலிம்பிக் குழு மீது வழக்கு



சர்வதேச ஒலிம்பிக் குழுமீது வழக்குத் தொடர்வது குறித்து ஆலோசனை செய்து வருவதாக ஒலிம்பிக்கில் தங்கத்தை வென்று தகுதிநீக்கம் செய்யப்பட்ட ஹங்கேரி வீரர் அட்ரியன் அன்னுஸ் தெரிவித்தார்.

ஏதென்சில் நடைபெற்ற 28 ஆவது ஒலிம்பிக் போட்டியில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற தட்டு எறிதல் போட்டியில் 79.93 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தை அன்னுஸ் கைப்பற்றினார்.

ஆனால், அதைத் தொடர்ந்து நடைபெறவேண்டிய ஊக்கமருந்து சோதனையில் அவர் ஈடுபடாமல் ஒலிம்பிக் கிராமத்தை விட்டு வெளியேறினார். இதனால் அவரது பதக்கம் பறிக்கப்படுவதாக ஒலிம்பிக் குழு அறிவித்தது.

இந்த நிலையில் புடாபெஸ்டின் மேற்கேயுள்ள கோம்பாதெலியில் உள்ளூர் பத்திரிகை நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியுள்ளதாவது -

தட்டு எறிதலில் நான்தான் ஒலிம்பிக் சம்பியன். அதனால் அந்தப் பதக்கத்தை நானே வைத்துக்கொண்டுள்ளேன்.

ஊக்கமருந்து சோதனையில் எனக்கு எதிராக முடிவு மேற்கொள்ளப்படவிருந்ததை பிரசாரம் மூலம் தெரியப்படுத்தவுள்ளேன்.

இந்த ஒலிம்பிக்குடன் மேற்கொள்ளவிருந்த ஓய்வு முடிவையும் கைவிட்டுள்ளேன். காரணம் இம்மாதிரியான அவப்பெயருடன் ஓய்வுபெறுவதை நான் விரும்பவில்லை.

இதற்கிடையே ஐ.ஓ.சி மேற்கொண்டுள்ள பதக்கம் பறிப்பு முடிவு குறித்து எனக்கு ஆதரவாக வழக்குத் தொடர பல நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அதில் சர்வதேச நிறுவனங்களும் அடங்கும் எனவும் தெரிவிததார்.

அன்னுஸ் பெற்ற தங்கப் பதக்கத்தைத் திருப்பிக்கொடுக்குமாறு, ஹங்கேரி ஒலிம்பிக் சங்கத்துக்கு ஐ.ஓ.சி கடிதம் எழுதியுள்ளது.

# அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி; ஹெனின், வீனஸ் 2 ஆம் சுற்றில்!



அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியின் முதல் சுற்றில் - ஜஸ்டின் ஹெனின், வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோர் வெற்றிபெற்றனர்.

கிரா்ண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி நியூயோர்க்கில் நடந்து வருகிறது.

இதில் பெண்கள் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் முதல்நிலை வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் (பெல்ஜியம்) 6-1, 6-4 என்ற நேர் செட்டில் செக் குடியரசு வீராங்கனை நிகோலெவைடிசோவைத் தோற்கடித்து 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

7 ஆம் நிலை வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா) 6-3, 5-7, 7-5 என்ற செட் கணக்கில் அமெரிக்க வீராங்கனை லாரா கிரான்வெலெவை தோற்கடித்து இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றார்.

11 ஆம் நிலை வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) 6-3, 7-5 (7-3) என்ற நேர் செட்டில் பெட்ரா மண்டுலாவை (ஹங்கேரி) தோற்கடித்து 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்றில் 2 ஆம் நிலை வீரர் அண்டி ரோட்டிக் (அமெரிக்கா) 6-0, 6-2, 6-2 என்ற நேர் செட்டில் சக நாட்டு வீரர் ஜென் கின்ஸ்சை தோற்கடித்து 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

13 ஆம் நிலை வீரர் மரட்ஷபின் (ரஷ்யா) முதல் சுற்றிலேயே அதிர்ச்



சித் தோல்வியடைந்தார். அவர் 6-7 (5-7), 4-6, 6-3, 3-6 என்ற செட் கணக்கில் தோமஸ் என்குவிஸ்சிடம் (சுவீடன்) தோல்விகண்டார்.

# நேற்றைய ஆட்டத்திலும் யாழ்.மாவட்ட அணி வெற்றி

(தம்புள்ள)

தம்புள்ளவில் நடைபெறும் 16 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் போட்டியில் - நேற்று நடந்த ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணி 99 ஓட்டங்ளைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பிரகாஸ் 41, கோகுலராஜ் 20, ஓட்டங்களையும் அணிக்கு பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ். அணி வீரர்கள் ஆர்.ராஜ்குமார் 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், வை.பாலா 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ராஜ்குமார் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மாவட்ட அணி 8 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து 103 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அர்ச்சுன்ராஜ், தர்சன் ஆகியோர் தலா 13 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் தினேஸ் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், கோகுலராஜா மற்றும் திலீபன் ஆகியோர் 21 ஓட்டங்களுக்கு தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இன்று யாழ். மாவட்ட அணி மட்டக்களப்பு அணியுடன் மோதவுள்ளது.

# மைனர் மாவட்ட சுற்றுப்போட்டி; யாழ். அணி தம்புள்ள செல்கிறது

இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் மைனர் மாவட்ட துடுப்பாட்ட போட்டியில் 2 ஆவது போட்டியாக யாழ். அணி திருகோணமலை மாவட்ட அணியுடன் நாளைரண்கிரி தம்புள்ள சர்வதேச விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ளது. இதற்காக யாழ்.அணி இன்று காலை 7 மணிக்கு தம்புள்ள செல்லவுள்ளது.

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட அணி இந்தச் சுற்றுப்போட்டியில் முதல் போட்டியில் மன்னார் அணியை 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இந்த இரு போட்டிகளிலும் மிகச் சிறந்த வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டு வட - கிழக்கு மாகாண அணிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்.

யாழ்.வீரர்கள் :- ரி.கௌரிபாகன், பி.ஜெயரூபன், ப.சிவராசா, எஸ்.லக்சுமிகாந்த், ஜி.சசிவர்ணன், ரி.யதார்த்தன், எஸ.றஜீத், எஸ்.சிவசங்கர், எஸ். சர்வானந்த், ஆர்.கிருஷ்ணராசா, ஆர். நவீனன், ரி.றொபேசன், எஸ்.சிற்சபேசன், கே.டினேஸ், ஏ.துஸ்யந்தன்.

### இந்திய - பாகிஸ்தான் போட்டி மாற்றம்

இந்திய கிரிக்கெட் சங்கத்தின் பவள விழா ஆண்டையொட்டி பாகிஸ்தான் அணி இந்தியா வந்து ஒரே ஒருநாள் போட்டியில் விளையாடவுள்ளது. இந்தியா - பாகிஸ்தான் இடையேயான இந்தப் போட்டி நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

தற்போது அதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒருநாள் முன்னதாக நவம்பர் 13 ஆம் திகதி இந்தியா-பாகிஸ்தான் போட்டி கொல்கத்தாவில் நடைபெறும் என்று இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் டால்மியா தெரிவித்தார்.

# தேசியத் தலைவரின் தலைமையின் கீழ் தமிழரைச் சூழ்ந்த இருள் விலக்கப்படுகிறது

## - நூல் வெளியீட்டு விழாவில் இளம்பரிதி

சிங்கள இனவெறியாளர்களின் ஆக்கிரமிப் பினால் சூழ்ந்த இருளை அகற்று வதற்காக முயன்ற தலைவர்களில் சிலரின் போக்குகளினால் எங்களுடைய வாழ்வில் இருள சூழ்ந்தது. இந்தத் துக்ககரமான பேரினவாதக் கொள்கையில் ஒளியைத் தேடிய எமது மக்களுக்கு ஒளியைத்தரும் ஒரு உத்தமனாக தேசியத் தலைவர் வே.பிரபாகரன் எமது விடுதலைக்கான, போராட்டத்துக்காக தலைமையை ஏற்றார் என போராளி தமிழ்க்கவி எழுதிய "இருள் இனி விலகும்" எனும் நாவல் வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றிய யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் தேசிய தலைவர் தலைமையை ஏற்ற நாளில் இருந்து தமிழர்களது வாழ்வில் இருந்த இருள் விலகிக் கொண்டே இருந்தது. நிச்சயமாக தமிழர்களது வாழ்வில் இருள் இனி விலகும்.

இந்த நாடு சிங்கள நாடு, இந்த நாட்டு மக்கள் சிங்கள மக்கள் இது தான் அன்றும், இன்றும் சிங்கள பௌத்த பேரினவாதிகளினால் பேசப்படுகின்ற இனவாதம்.

சிங்கள நாடு, சிங்கள மக்கள், சிங்களப் படை எல்லாமே சிங்களம். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் எமது தலைவருடைய அந்த ஒளிப் பிரவாகம்தான் தமிழர்களுடைய வாழ்வில் வளமும், தேசியமும், வரலாறும் வலுவாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டு, இந்த நாட்டிலே, இந்த இலங்கையிலே இரண்டு படைகள் இருக்கின்றன என்ற நிலையை ஏற்படுத்தி இருக்கிறது.

இரண்டு நாடுகளுக்கிடையே தான் ஒரு யுத்த நிறுத்தம் நடக்கும். எனவே புலிகளுடன் எந்த அடிப்படையில் தங்கள் யுத்த நிறுத்தத்தில் ஈடுபடுவது, எந்த அடிப்படையிலும் சாத்தியமற்றது. ஆனால், உங்களுக்குத் தெரியும் இரண்டு நாடுகள் என்ற அடிப்படையில் தான் அதைக் கருதித்தான் இந்த யுத்த நிறுத்தம் ஏற்பட்டிருக்கின்றது.

எனவே நாடுகள் தோறும் தனித்துவமான தோரணையில் தமிழர்கள் தங்களுக்கொரு கட்டுமானத்தையும், தனித்துவமான சிறப்புக்களையும் கொண்டிருப்பதை நாங்கள் இங்கு பார்க்கின்றோம்.

இவ்வாறாக தேசிய தனித்துவங்களை வளர்த்தெடுத்துக் கொண்டு தங்கள் வாழ்வில் இருளைப் போக்கிக் கொண்டு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைத் தேடி எமது மக்களும் நாங்களும் நடக்கிறோம் எனத் தெரிவித்தார்.

## குடத்தனைபொதுமண்டப திறப்புவிழா நாளை

நியாப் நிறுவனத்தின் உதவியுடன் ரூபா ஆறு லட்சம் செலவில் குடத்தனைக் கிராமத்தில் அமைக்கப்பட்ட பொதுமண்டபக் கட்டடம் நாளை காலை 10 மணிக்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுத பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில், யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த விழாவின் சிறப்பு விருந்தினர்களாக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.பாலகிருஷ்ணன், வடமராட்சி கிழக்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.ஈஸ்வரபாதம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.எச்.ஜீ.ஜீவரட்ணம், குடத்தனைக் கிராம அலுவலர் ந.தர்ம குலசிங்கம், குடத்தனை முன்னாள் கிராம அலுவலர் க.யோகேந்திர நாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (21)

## பருத்தித்துறை நகர்ப்பகுதியில் மின்விளக்குகள் ஒளிர்வதில்லை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர்ப்பகுதியில் மின்விளக்குகள் எரியாததால், நகரம் இருளில் மூழ்கியுள்ளது. இதனால் இரவு நேரங்களில் மக்கள் நடமாடுவதற்கு அஞ்சுகிறார்கள்.

இவ்வாறு மின்குமிழ்கள் எரியாமல் இருளில் இருப்பதால், வழிப்பறி கொள்ளைத் தாக்குதல் போன்றன நடப்பதற்கும் சமூக சீரழிவு சம்பவங்கள் இடம்பெறுதற்கும் ஏதுவாகின்றன.

இதுபற்றி பல தடவைகள் மின்சார சபையிடம் அறிவித்தும் எவ்வித பயனுமில்லை. ஆகவே உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த மின்விளக்குகள் எரிவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (14)

## - குடத்தனை மாதர் சங்கத்துக்கு -
## சுழற்சி முறையில் கடன் வழங்க ஆறு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(குடத்தனை)

நியாப் நிறுவனத்தினால் ஜீவனோபாயத்திட்டத்தின் கீழ் சுழற்சி முறையில் கடன் வழங்குவதற்காக ஆறு லட்சம் ரூபா குடத்தனை மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் நீர் இறைக்கும் இயந்திரம், தையல் இயந்திரம், கொள்முதல் செய்தல், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சிறு வியாபாரம் செய்தல் ஆகிய தொழில் முயற்சிகள் செய்வதற்கு இந்தக் கடன் வழங்கப்படவிருக்கிறது.

மாதாந்தம் அங்கத்தவர்களிடமிருந்து மீளப் பெறப்படும் கட்டுப் பணம், வட்டிப்பணம், மற்றைய அங்கத்தவர்களுக்கு சுழற்சி முறையில் வழங்கப்படுமென கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.எச்.ஜீ. ஜீவரட்ணம் தெரிவித்தார். (21)

## இ.போ.ச. பஸ் கட்டணம் நேற்று முதல் அதிகரிப்பு

வடபிராந்திய போக்குவரத்து சபையின் அனைத்து பிரதேசங்களுக்குமான பஸ் கட்டணங்கள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக, பிராந்தியப் போக்குவரத்து சபையின் பொதுமுகாமையாளர் க.கணேசபிள்ளை தெரிவித்தார்.

மத்திய போக்குவரத்து சபையின் முகாமையாளரின் பணிப்புக்கு அமைய இந்த புதிய பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கட்டணங்களின் விபரம் வருமாறு -

| கட்டணத்துறை இல | தற்போதைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|
| 1 | 3.00 | 3.50 |
| 2 | 4.00 | 5.00 |
| 3 | 6.00 | 6.00 |
| 4 | 7.00 | 8.00 |
| 5 | 8.00 | 9.00 |
| 6 | 9.00 | 10.00 |
| 7 | 11.00 | 12.00 |
| 8 | 11.50 | 13.00 |
| 9 | 13.00 | 14.00 |

| கட்டணத்துறை இல | தற்போதைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|
| 10 | 14.00 | 15.50 |
| 11 | 15.00 | 17.00 |
| 12 | 16.00 | 19.00 |
| 13 | 17.00 | 20.00 |
| 14 | 17.50 | 21.00 |
| 15 | 18.00 | 21.50 |
| 16 | 19.50 | 23.00 |
| 17 | 20.00 | 23.50 |
| 18 | 21.00 | 24.00 |



USAIDநிறுவனத்தின் கொழும்பு தூதராலய பொறுப்பதிகாரி தென்மராட்சி சமூக மேம்பாட்டு நிறுவனத்துக்கு தையல் இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்கிய நிகழ்வுக்கு வருகை தந்தபோது வரவேற்கப்படுகிறார். (29)

## சின்னச்சிறு செய்திகள்

### மாணவர் உதவிப் பணம் மக்கள் வங்கியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாணவர் உதவிப் பணத்தை சகல பீட மாணவர்களும் திருநெல்வேலியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

இது வழங்கப்படுதற்கான கால அட்டவணையை பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என பல்கலைக்கழக நலச் சேவைக் கிளைப் பதிவாளர் தெரிவித்தார்.

### தூக்கி வீசப்பட்டு ஒருவர் காயம்

(பருத்தித்துறை)

வன்னியில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து வந்தவர் அதிலிருந்து தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த அன்ரன் மரியதாஸ் (49 வயது) இருகைகளிலும் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் முரசுமோட்டைப் பகுதியில் இடம்பெற்றது.

### திருத்தப்படாத நிலையில் இந்து மயான வீதி

(கோண்டாவில்)

இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்குச் செல்லும் கோண்டாவில் சோளந்தோட்ட வீதி நீண்ட காலமாகத், திருத்தப்படவில்லை. மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்த வீதியூடாக வாகனங்கள் மற்றும் விவசாயச் செய்கைகாகப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் எடுத்துச் செல்ல முடியாத நிலையில் இருப்பதாகவும் மற்றும் இறுதிக் கிரியைக்காக வருவோரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் முறையீடு செய்தும் அவர்கள் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (82)

### மீன் வியாபாரிகளால் போக்குவரத்து இடையூறு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் இருந்து செல்லும் அத்தியடி புதிய ஒழுங்கையின் தொடக்கத்தில் பல காலமாக அதிகளவு மீன் வியாபாரிகள் ஒன்றுகூடி சந்தைபோல மீன் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதால் அந்த வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது.

அந்த வீதியில் மீன்கழிவுகளையும் அவர்கள் வீசுவதால் அந்தப் பகுதியில் துர்நாற்றமும் வீசுகின்றது. இதனால் இந்த வீதியுள்ள பிரயாணிப்போர் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். (90)

### திறப்பு விழா

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் தலைமைப் பணிமனைநாளை காலை 11 மணிக்கு மருதங்கேணி சந்திக்கு அண்மையில் திறந்து வைக்கப்படவுள்ளது. (21)

### அடையாள அட்டை கண்டெடுப்பு

இணுவில் கிழக்கைச் சேர்ந்த நடேசமூர்த்தி நவதீஸன் என்பரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

### சைவப்புலவர் பட்டமளிப்பு விழா

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் 44ஆவது ஆண்டு நிறைவு விழாவும், சைவப் புலவர் பட்டமளிப்பு விழாவும் நாளை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபலகிருஸ்ணஐயர் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் 2003இல் இளஞ்சைவப் புலவர், சைவப்புலவர் தேர்வுகளில் சித்தியடைந்தோர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (44)

### வடமராட்சி கிழக்கில் வாக்காளர் பதிவு மேற்கொள்ளப்படுகிறது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான 18 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

இதுவரை வாக்காளர்களாகப் பதிவு செய்யாத 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் தமது பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு உரிய படிவங்களை பெற்றுப் பூர்த்தி செய்து கிராம அலுவர்களுடன் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

### வழக்குத்தாக்கல் செய்யவுள்ளனர்

(தென்மராட்சி)

தென்மராட்சி பகுதிகளின் அதி உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு மீளக்குடியமர்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட எழுதுமட்டுவாள் மற்றும் தனங்கிளப்பு ஏனைய பகுதி மக்களும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கான சட்ட உதவிகளை நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் வழங்க இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (29)

### பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள தென்மராட்சி கல்வி கோட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என தென்மராட்சி கல்விக் கோட்டப் பணிப்பாளர் வ.செல்வராச அறிவித்துள்ளார். (29)

### பயன்தரு மரங்கள் வழங்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள பிரதேசங்களுக்கு பயன் தரு மரக் கன்றுகளை வழங்குவதற்கான நடவடிக்கையை சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி எடுத்துள்ளார்.

இதற்கென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான மரக்கன்று விபரங்களைத் தந்து உதவுமாறு கடிதமூலம் கோரியுள்ளார். (29)

### பிரிவுபசார விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் செயலாளராக கடமையாற்றி, வவுனியா நகர சபைக்கு இடமாற்றம் பெற்று செல்லும் சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவவை கௌரவிக்கும் வகையில் சாவகச்சேரி நகரசபை நலன்புரிச் சங்கம் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன் கிழமை பிரிவு உபசார விழாவும், மதியபோசன நிகழ்வும் நடத்தப் படவுள்ளது. (29)

### சின்னமுத்து தடுப்பு மருந்தேற்றுதல்

எதிர்வரும் 11,12 ஆம் திகதிகளில் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரையும் 16 வயது தொடக்கம் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கு சின்னமுத்து தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

இதற்காக மாநாகர சபை எல்லைக்குள் 13 நிலையங்கள் தொிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையங்களுள் தனியார் கல்வி நிலையங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. எனவே அனைத்து 16 வயது தொடக்கம் 20 வயது வரையான ஆண்கள் யாவரையும் தவறாது சின்ன முத்து தடுப்பு மருந்ததைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

இதற்காக 210 சுகாதார தொண்டர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் 11,12 ஆம் திகதிகளில் திகதிகளில் கடமையில் ஈடுபடும் தொண்டர்களுக்கு சிற்றூண்டி மற்றும் தேனீர் செலவுகளை ஏற்குமாறு பொது அமைப்புகளிடம் சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுவதாகவும், உதவ விரும்பும் கழகங்கள் மற்றும் அமைப்புகள் யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறும் சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (90)






சரோஜா சிவச்சந்திரன்

# பெண்கள் - சுயமாக வாழத் துணியும்போதே உரிமைகளையும், சுதந்திரத்தையும் அனுபவிக்கமுடியும்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டத்தினரால் நடத்தப்பட்ட 'பெண்கள் உரிமைகளைத் தெரிந்துகொள்ளுதல்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் பெண்கள் அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்த கருத்துக்கள் -

பெண்களாகிய எமக்குள்ள உரிமைகள் என்ன? அவற்றை நாம் அனுபவிக்கின்றோமா? அவற்றை அனுபவிக்க நாம் என்ன செய்ய வேண்டும்? அவற்றைப் பெற்றுக் கொள்ள எமக்கிருக்கும் வழிவகை என்ன? இந்த வினாக்கள் பற்றிய விடைகளும் தெரிந்திருக்குமாயின் - இன்று பெண்கள் சுதந்திரமாக வாழத் தடையிருக்காது.

எமது சமூகத்தில் பெண்கள் தமது உரிமைகளைக் கேட்டுப் பெறுவதில்லை. மாறாக அவர்கள் பல வழிகளிலும் சுரண்டப்பட்டே வருகிறார்கள். தமது உரிமைகளைப் பற்றி அவர்கள் தெரிந்திருந்தாலே, சுரண்டலில் இருந்து தப்பித்துக் கொள்ளமுடியும்.

இந்த எண்ணத்திலேயே பெண்களோடு களது எல்லைகள் எவை? என்பது பற்றியும் அந்த எல்லைகள் இன்று யார் யாரால் தீர்மானிக்கப்படுகின்றன என்பது பற்றியும் அறிந்திருப்பது முக்கியம்.

எமது சமூகத்தில் இன்று இந்த எல்லைகளைத் தீர்மானிப்பது குடும்பமாக, அதிலும் குறிப்பாக ஆண்களாகவே இருக்கிறார்கள். உரிமையை வேண்டிநிற்கும் பெண்ணைத் தவிர அனைத்துத் தரப்பினருமே அவளுக்கான உரிமையின் எல்லையைத் தீர்மானிக்க முன்நிற்கின்றனர். குறித்த அந்தப் பெண்ணுக்கான தேவைகள், அவளது உணர்வுகள், விருப்பு வெறுப்புகள் எதுவுமே கருத்துக்கு எடுக்கப்படாமலே அவளுக்கான எல்லைகள் வரையறுக்கப்பட்டு விடுகின்றன.

ஆரம்ப காலங்களில் ஆண்களில் பெண்கள் தங்கியிருந்ததோடும், எமது சமூக அமைப்பில் ஆண்களின்மீது ஒரு சுமையாகப் பெண்கள் சுமத்தப்படலும், காலம் காலமாக வந்த பெண்ணிய அடக்குமுறைக் கருத்துக்களுமே இந்த எல்லை வகுப்புக்குக் காரண மாக அமைந்தன.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் பல இன்று சட்டத்தினால் தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளன. இருந்தும் நாம் அந்தச் சட்டரீதியான பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முயலாதவர்களாகவே இருக்கின்றோம்.

1995 ஆம் ஆண்டு மே மாதமளவில், சீனாவில் சர்வதேச பெண்கள் மகாநாடு நடைபெற்றபோது, அங்கு பெண்களோடு தொடர்பான பதினான்கு விடயங்கள் முன்வைக்கப்பட்டு, அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறுகோரி, உலக நாடுகள் அனைத்துக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதன் ஒரு விளைவாகவே இலங்கையில் மகளிர் விவகாரத்துக்கென ஒரு தனி அமைச்சுகூட உருவாக்கப்பட்டது. தொடர்ந்தும் பெண்கள் அபிவிருத்திச் சாசனம் என்பதும் உருவாகியது. இருந்தும் இவை களால் ஏற்பட்ட பலாபலன்களைத் தமிழ் பேசும் பெண்கள் அனுபவிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இணைந்த பல்வேறு தொழிற்சங்கங்கள் தோற்றம் பெற்றன.

இலங்கையில் பதினெட்டுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இருந்தும், அவைகூட இன்று பெண்கள் சுரண்டப்படுவதைத் தடுக்க இயலாதவைகளாகவே இயங்கிவருகின்றன. இவை எல்லாவற்றுக்கும் பிரதானமான காரணம், பெண்களுக்கு - பெண் தொழிலாளர்களுக்கு தமக்குள்ள உரிமைகள் பற்றி முழுமையாகத் தெரியாதே.

இன்று பெருந்தோட்டத்துறையில் மட்டுமன்றிக் கிராமிய முறைசாராத் தொழில் புரியும் பெண்கள்கூட அவர்களுக்கென ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவன அமைப்பு அவர்களுக்குத் தமது உரிமைகளைவிட கிடைக்கின்ற சம்பளமே பிரதானமானதாக அமைந்துவிடுகிறது. சம்பளம் என்பது பிரதானமான இடத்தைப் பெறும்போது, மேலதிக நேர வேலைகளைச் செய்யவும், விருப்பமற்ற பல வன்முறைகளுக்கு முகம் கொடுக்கவும் வேண்டியநிலை ஏற்படுகிறது.

உண்மையில் பெண்கள் தமக்குரிய உரிமைகள், தொழில் பாதுகாப்புக்கள் போன்றவற்றைத் தெரிந்துகொள்ளாமல் இருப்பதால்தான் கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். பெண்கள் தமது உரிமைகள் எவை என்பது மட்டுமன்றி, அந்த உரிமை

> **பெண்கள் இன்னுமொருவரில் தங்கியிருக்கும் வாழ்க்கை வாழ்ந்து வரும்போது, தமது உரிமைகளையோ, சுதந்திரத்தையோ அனுபவிக்க முடியாது. அவர்கள் தமது சொந்தக் காலில் சுயமாக வாழத்துணியும்போதே, தமது உரிமைகளையும், சுதந்திரத்தையும் அனுபவிக்கமுடியும்.**

பெண்கள் இன்னுமொருவரில் தங்கியிருக்கும் வாழ்க்கை வாழ்ந்துவரும்போது தமது உரிமைகளையோ, சுதந்திரத்தையோ அனுபவிக்க முடியாது. அவர்கள் தமது உரிமைகளையும், சுதந்திரத்தையும் அனுபவிக்கமுடியும். எனவே பெண்கள் தமது கல்வி நிலையை, தமது திறன்கள், தகைமைகளை அதிகரித்துக்கொள்ள வேண்டும். அதனூடாக பொருளாதார உறுதிநிலையைப் பேணுகின்றபோதுதான் தமது உரிமைகளையோ, சுதந்திரத்தையோ முழுமையாக அனுபவிக்கமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

## பெண் மொழிகள்

* ஆண்களுக்கு ஓர் சொல்: உலகம் முழுவதையும் உன் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதனை ஆளும் அரசனாக இருப்பதைவிட, ஒரு பெண்ணின், சிறந்த மனதின் அரசர்க்கரசனாக இருப்பதே மேல். *- இங்கர்சால் -*

* எவ்வளவு ஞானியான ஆணும் ஏதாவது ஒரு பெண்ணிடம் ஏமாந்து விடுகிறான். எவ்வளவு ஏமாளியான பெண்ணும் எந்த ஆணிடமும் எப்போதும் எச்சரிக்கையுடனே இருக்கிறாள். *- தியோடர் ரீஸ்க் -*

* பெண்களுக்காக உயிரைத்தர சித்தமாக இருக்கும் இந்த உலகமும், ஆண் வர்க்கமும் பெண்ணுக்குச் சுதந்திரம் தர மட்டும் சம்மதிப்பதில்லை. *- அலன் மார்ட்டோ -*

* பெண்ணின் அழகு அவர்களின் நிர்மலமான நடத்தையில் இருக்கிறது. அணிகலம் அணிவதால் பெண் அழகாவதில்லை. *- மகாத்மா காந்தி -*

* உலக அன்னையின் தோற்றமான பெண்களை உயர்வடையச் செய்தாலொழிய நீங்கள் உயருவதற்கு வேறு வழியிருக்கிறது என எண்ணாதீர். *- விவேகானந்தர் -*

* பெண்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியது நான்கு -

ஒரு பெண்ணைப் போல தோற்றத் தெரிந்திருக்க வேண்டும்.

ஒரு மாது போல நடந்து கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும்.

ஒரு ஆண் போல சிந்திக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

ஒரு நாய் போல உழைக்கத் தெரிந்திருக்க வேண்டும். *- சுரோலின் சைமன் -*

* ஆண்கள் பறக்கும் பட்சிகளைப் போல், அவர்கள் என்ன வேண்டுமானாலும் எளிதில் செய்துவிடலாம். ஆனால், பெண்கள் அப்படியல்ல. நன்றாக வேரூன்றிய மரத்துக்குச் சமமானவர்கள். மரத்தை வேரோடு பிடுங்குவது சிரமமல்லவா - அதைப் போல் எல்லாப் பந்தங்களையும் அறுத்துக் கொண்டு பெண்கள் வெளிக் கிளம்புவது கடினம். *-ராஜாஜி-*

# புகுந்த வீட்டுக்கு அடியெடுத்து வைக்கும் பெண்ணே!

திருமணம் "ஆயிரம் காலத்துப் பயிர்" என்றுதான், தகுதிக்கு மீறி ஆடம்பரமாகச் செலவுசெய்து, பிள்ளைகளுக்கு மணமுடித்து வைக்கின்றார்கள் பெற்றோர்கள். உற்றார், உறவினரும் கூடிவாழ்த்தி அத்தனை சம்பிரதாயங்களோடும் நடைபெறுகிற எல்லாத் திருமணங்களும் வெற்றியடைகின்றனவா என்றால்... இல்லை என்றுதான் சொல்லவேண்டி இருக்கின்றது.

இந்தக் காலத்து இளம் தம்பதிகளுக்குப் பொறுமை குறைவாகக் காணப்படுகின்றது. ஆனால், இன்றைய தலைமுறை பக்குவமாகத்தான் நடந்துகொள்கின்றது. எப்படி இருந்தும் குழப்பத்தை ஏற்படுத்துவதில் பெரியவர்களுக்குப் பெரிய பங்கு இருக்கின்றது.



தப்பு யார் மீது என்றாலும், ஒரு பெண் நினைத்தால் எந்த ஒரு இல்லத்தையும் மகிழ்ச்சிப் பூந்தோட்டமாக ஆக்கமுடியும்.

பெண் எல்லாத்தையும் மனசுக்குள்ளே போட்டுப் புதைத்து, விருப்பம் இருந்தாலும் வெளியே சொல்லமுடியாத ஆரம்ப காலங்களில் பிரச்சினைகள் வெடிக்க இடமில்லாமல் போய்விட்டது. ஆனால், இன்றைய காலங்களில் விழிப்புணர்வோடு பெண்கள் வளர்ந்திருக்கின்றார்கள்.

கல்வி, வேலை, வருமானம் ஈட்டல், சுதந்திரமான சிந்தனை போன்றவற்றில் பெண்கள் அதிகமாக ஈடுபடுகின்றார்கள். தன்னுடைய காலில் நிற்கின்ற பெண் புகுந்தவீட்டில் தன்னைத் தயார்படுத்திக்கொள்ளக் கொஞ்சக் காலம் ஆகும். ஒரு இடத்தில் வளர்ந்த மரத்தைப் பிடுங்கி வேறு ஒரு இடத்தில் கொண்டுவந்து நடுகின்றபோது, அந்த மரம் வேர்விடக் கொஞ்சக்காலம் அவகாசம் கொடுக்கின்ற நாங்கள், வேறொரு குடும்பத்திலிருந்து வாழவருகின்ற பெண்ணுக்கு அந்த இடத்தின் சூழலைப் புரிந்துகொண்டு சேர்ந்து வாழ்வதற்கு நேரம் கொடுப்பதில்லை. இதனாலும் பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

கல்யாணமான, முதல் ஒருவருடம் மிகவும் முக்கியமான காலகட்டம். அந்த சமயத்தில் உணர்ச்சிவசப்படாமல், புத்திசாலித்தனமாக நடந்தால், இனிமையான வாழ்க்கைக்கு வழிவகுக்கும். அதற்குப் பின்பு எப்படிப்பட்ட பிரச்சினை என்றாலும் ஊதித்தள்ளிவிட முடியும். எளிமையாக வளர்ந்த பெண் செல்வந்த வீட்டுக்குப் போகின்றபோது, கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். அந்தச் சூழ்நிலையில் அமைதியாக இருந்தால் பிரச்சினைகளைத் தவிர்த்துவிடலாம்.

- தர்சினி -

(தொடரும்...)

# உள்ளத்தளவில் பலம் வாய்ந்தவர்களாக பெண்கள் திகழ்கின்றனர்

பெண்களோடு ஒப்பிடும்போது, ஆண்கள் உடலளவில் பலம் அதிகம் கொண்டவர்கள் என்பது என்னவோ உண்மைதான். ஆனால், உள்ளத்தளவில் பலவீனமானவர்கள். என்ன, இந்த உண்மையை எந்த ஆண்மகனும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்!

உதாரணத்துக்கு தன்னம்பிக்கையோடு, பிள்ளைகளையும் வளர்ப்பாள். ஆனால், ஆண்களால் தனியாக தன் குடும்பத்தை நிர்வகிக்கவோ, பிள்ளைகளை கவனிக்கவோ முடிகிறதா சொல்லுங்கள்! (விதி விலக்காக எங்கேயாவது ஒரு சிலர் இருக்கலாம்)



மனைவியைப் பிரிந்த ஆண் மனமொடிந்து வீழ்ந்து விடுகிறான்! மீண்டும் அவன் எழ மற்றொரு பெண்தான் கொழுகொம்பாகவும், ஆணிவேராகவும் செயல்பட வேண்டியிருக்கிறது. பல குடும்பங்களாலும் இதனைப் பார்க்க முடிகின்றது. உதாரணமாக,

ஊரில் பெரியவர் என மதிக்கப்பட்ட ஒரு உறவினர் அவர் மனைவியை மிகவும் உதாசீனப்படுத்துவார்! நேருக்கு நேர் முகம் பார்த்து, அவர்கள் ஒருவருக்கொருவர் பேசியதை யாருமே பார்த்ததில்லையாம். கணவன் காலடியோசைக் கேட்டவுடனே 'கணவன்' தேவைகளைக் கவனிப்பாளாம். மனைவி சாப்பிடும் போதாவது மனைவியை அன்பான பார்வை பார்ப்பராம் கணவன்.

இப்படியான கணவருக்கு வருடம் ஒரு பிள்ளை என எழு பிள்ளைகளை பெற்றாராம் மனைவி. இது மட்டும் எப்படி? என்று ஊரே கேலி செய்யும்போது அந்த மனைவி அப்படியே கூனிக்குறுகிப் போவார். ஆனாலும் கணவரின் உதாசீனங்களை தன் பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தாமல் நன்றாகவே வளர்த்தாள் அந்தப் பெண்.


இப்படியே வாழ்ந்து முடித்து, பூவும் பொட்டுமாகப் போய்ச் சேர்ந்த விட்டார் மகராசி. வாழ்வரசி வாழ்ந்த வீடு இப்போது பாலைவனமாகிவிட்டது. கணவரோ சிறகொடிந்த பறவையாகி விட்டார். தன் கம்பீரம் அதனால் வந்த 'ஆணவம்' என அனைத்தும் பறிபோனது அவருக்கு. உயிரோடு இருந்தபோது தன் மனைவியை தான் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளத் தவறியதை எண்ணியெண்ணி இப்போது,

காலை முதல் இரவு வரை தனக்கென கடமை ஆற்றும் தன் மனைவியின் மனதை புரிந்தகொள்ள பெரும்பாலான ஆண்களுக்குப் பொறுமை இருப்பதில்லை. சொல்லப் போனால் வயது போகப்போக எங்கே குடும்பத்தினரிடமிருந்து நாம் ஒதுக்கப்பட்டு விடுவோமோ எனும் பய உணர்ச்சியில் பல குடும்பங்களில் ஆண்களின் அதிகாரம் 'அதி'காரமாகவே உள்ளது. குறிப்பாகக் கணவன், மகன், சகோதரன் என எந்த உறவாக இருந்தாலும், பெரும்பாலும் அவர்கள் சந்தர்ப்பவாதிகள்தான்.

இன்றைக்கு மாமியார், மருமகள் பிரச்சினைக்கும் உண்மையான காரணம் மாமிமார், மருமகள்கள் அல்ல... அவர்களிடையே வேறுபாட்டை உணர்த்தி இடைத்தரகர்கள் போல் மூக்கை நுழைப்பது பெரும்பாலும் ஆண்கள்தான்.

பெண்கள் விட்டுக் கொடுத்தாலும், சமயம் பார்த்து 'நாரதர்' வேலை செய்வது ஆண்கள்தான்! ஆண்களுடைய இன்னொரு பக்கம் இதுதான். ☆

# பிஞ்சுமுகத்தின் தேடல்



எனக்கு மிகவும் களைப்பாக இருந்தது. நாவறண்டு போச்சு!... கொஞ்சம் தண்ணீர் குடிக்க வேணும். இனிமேல் என்னால் ஒரு அடிகூட நடக்கமுடியாது. சிரமத்தோடு தலையை நிமிர்த்துகிறேன். சற்றுத்தூரத்தே ஒரு கிணறு கண்ணில் பட்டது.

ஆனால், எப்படி அங்கே போவது!... கடவுளே எனக்குத் தண்ணீர் வேணும். கண்ணை மூடிக்கொண்டு மனத்துள் வணங்குகிறேன். என் மனக் கண்ணில் ஒரு உருவம் தோன்றியது. செந்தாமரைபோலச் சிவந்தமுகம். புன்முறுவல் தவழும் முகம். நெற்றியில் சந்தனப் பொட்டும் வெண்ணீறும்.

அந்தப் பிஞ்சுமுகத்தை நான் பார்த்தபோது. அது தன் அரிசிப் பற்களைக் காட்டிச் சிரித்தது. என் உள்ளத்தில் அந்தச் சிரிப்பை அப்படியே சிறைப்பிடித்து வைத்தேன். அதை இன்னமும் சிறை மீட்கவில்லை.

தாத்தா!.. குரல் கேட்டுக் கண்ணைத் திறந்தேன்! எதிரே நின்ற உருவத்தை என்னால் நம்பவே முடியவில்லை. என் மனச்சிறையில் நான் சுமக்கும் அதே உருவம்! கையிலே ஒரு செவ்விளநீர்!.. பரிவோடு என்னிடம் அதை நீட்டியது. என் நீர் வேட்கை தீர அதை வாங்கி மட மடவென்று குடித்தேன்.

தேன் போல் இனிமையான இளநீர் நான் முழுவதையும் குடித்துவிட்டுக் கோம்பையைக் கீழேவைத்தேன். அந்தச் சிறிய பாதங்களில் அழகான விரல்கள்.. மருதோன்றியிட்ட விரல்கள். அந்த விரல்களைப் பற்றி வணங்க எண்ணினேன். அதற்குள் அந்தப் பிஞ்சுமுகம் என்னை நோக்கிக் குனிந்தது. "தாத்தா! இன்னும் வேண்டுமா?" குரல் என்னைச் சொக்க வைத்தது. "இல்லை மோனை! போதுமடி! என குரல் கரகரத்தது. கண்ணில் நீர் சுரந்தது. என் கண்ணீரைத் தன் பிஞ்சு விரலால் துடைத்த அந்தச் சிறுமியின் கரத்தில் ஒரு அன்னையின் பரிவு தெரிந்தது.

"மோனை உன்ரை பெரென்னடி!" நான் அவளைக் கேட்டபோது அவள் புன்னகையோடு சொன்னது என் உள்ளத்தை உறைய வைத்தது.

என்ரை பேர் எனக்குத் தெரி யாது!... எனக்கு யாரும் இல்லை!.. அவள் குரலில் சோகத் தின் நிழல்கூட இல்லை. சிரித்துக் கொண்டு நின்றாள். எனக்கு அவளிடம் இன்னும் பல கேள்விகளைக் கேட்கவேணும் போலிருந்தது. மெல்ல எழும்பினேன். இளநீர் தந்த தெம்பு. நான் நடக்கத் தொடங்கினேன்.

தாத்தா! இந்த வெயிலில் எங்கே போகப் போகிறீர்கள்! என்ரை வீட்டை வாங்கோ! கொஞ்ச நேரம் ஆறியிருந்து பிறகு போகலாம். என்னால் அந்தப் பிஞ்சுமுகத்தின் தேடலை உணரமுடிந்தது. ஒன்றும் பேசாமல் நின்றேன். அவள் என் கையைப் பற்றினாள். மெல்ல நடக்கத் தொடங்கினேன்.

நான் வேறு வழியின்றி கூடவே நடந்தேன். என்னைப் பற்றியிருந்த பிஞ்சு விரல்களின் உறுதி என்னை வியக்க வைத்தது. நான் என் மடியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன். அது கனமாக இருந்தது. சற்று தூரம் நடந்தபின்னர் ஒரு குச்சொழுங்கையில் இறங்கினோம். ஒரு சிறிய தென்னந்தோப்பு நிறையத் தென்னைமரங்கள். நல்ல குளிர்மை. சின்னவளின் வீடு கண்ணில் பட்டது.

சிறிய குடிசை ஓலையால் வேயப்பட்டிருந்தது. சுற்றிவர மணற்திண்ணை. அந்தத் திண்ணையிலே ஒரு உருவம் படுத்திருந்தது. அந்த உருவம் என்னைக் கண்டதும் எழும்ப முயற்சி செய்தது.

ஆனால் முடியவில்லை. வாய் மட்டும் ஏதோ முனகியது. தாத்தா! இந்தத் திண்ணையில் இருங்கோ!... அவள் என்னை இருத்தினாள். தானும் பக்கத்தில் இருந்து கொண்டாள். அவள் வாய் பேசத்தொடங்கியது.

தாத்தா! நாங்கள் இடம் பெயர்ந்து வந்து இங்கே இருக்கிறோம். என்ரை அப்பாவும், அம்மாவும் எங்கேயோ போயிவிட்டார்களாம். என்னை இந்தப் பெரியவர் தான் வளர்க்கிறார். 5 வருடமாக இங்கே இருக்கிறோம். இவரை நான் 'சாமியார்' என்று தான் கூப்பிடுவேன். இவருக்குக் குடும்பம் இல்லையாம்!... என்று கூறிவிட்டு நிறுத்தினாள்.

நான் அவள் முகத்தைப் பார்த்தேன். தெளிந்த நிலவு போன்றிருந்தது. உன்ரை பேரென் னம்மா? நான் கேட்டபோது 'பார்வதி' என்று பதில் சொன்னாள். அப்போது படுத்திருந்த உருவம் மெல்ல எழும்பியிருந்தது. தாத்தா இதிலை இருந்து கொள்ளுங்கோ நான் ஆட்டுக்குக் குழை கட்டிவிட்டு வருகிறேன். பார்வதி குடிசையின் பின் புறம் போனாள்.

பெரியவர் பேசத் தொடங்கினார் 'இந்தப் பிள்ளை எனக்குக் கடவுள் தந்த பிள்ளை. கோவிலடியல் ஆறுமாதக் குழந்தையாக அழுதபடி கிடந்தாள் மடத்திலே படுத்திருந்த நான் அந்த அழுகுரல் கேட்டுப்போன போது அழுகையை நிறுத்தி என்னைப் பார்த்த அந்தக் குழந்தையை நான் விட்டு விட்டு வர மனமில்லாமல் எடுத்து வந்து வளர்க்கிறேன். இப்போது எட்டு வயது வந்துவிட்டது. எனக்கோ வியாதி முற்றிப் போய்விட்டது.

இவளை யாரிடமாவது ஒப்படைத்துவிட்டால் எனக்கு நிம்மதி அவர் பேசப்பேச எனக்குள்ளே இருந்த இறுக்கம் தளரத் தொடங்கியது. மனம் நேற்று நடந்த சம்பவத்தை நினைத்து. நேற்றுக் காலையில் எழுந்தபோதே விழிவிசேடம் சரியில்லை.

பக்கத்துவீட்டில் முதல் நாள் நடந்த பூப்புனித நீராட்டுவிழா என் மனைவியின் மனத்தை வெகுவாகப் பாதித்துவிட்டது. பூப்படைந்த பெண்ணுக்கு ஆலாத்தி எடுக்கப் பெண்களை அழைத்தபோது என் மனைவியும் அழைத்தார்களாம். ஆனால், பக்கத்திலிருந்த பெண்மணி 'இவவுக்குப் பிள்ளையில்லை' இவவேண்டாம். என்று மறித்துவிட்டாள். என் மனைவி உடனே அங்கிருந்து கிளம்பி விட்டாள்.

இரவு முழுவதும் ஒரே அழுகை. நான் சமாதானம் செய்து களைத்து விட்டேன். இடம் பெயர்ந்து வாழும் எங்கள் வரலாறு அறியாத புதிய ஊர் என் மனைவியின் ஒரே மகள் 3 வயதில் 5 ஆண்டுகளுக்கு முன்பு வயிற்றுப்போக்கால் போதிய மருத்துவ வசதியில்லாமல் மரணத்தைத் தழுவிய செய்தி புதிய ஊர் அறியாதது. அதனால் என் மனைவியை 'மலடி' என்று முடிவு கட்டிவிட்டது.

அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி கோப மாக என்னைத் தான் ஏசினாள். என்ரை பிள்ளை எனக்கு வேணும் போய் வேண்டிக் கொண்டு வந்து தாருங்கோ. நான் எவ்வளவோ விளக்கம் சொன்னேன் இவளோ விடுவதாக இல்லை. தன் நகைமுழுவதையும் மூட்டை கட்டி என்னிடம் தந்து உடனே வாங்கிவரச் சொன்னாள். நான் நகை மூட்டையோடு பிள்ளை வாங்கப் புறப்பட்டேன்...

என்ன தம்பி யோசனை? இந்தப் பிள்ளைக்கு என்ரை காணியெல்லாம் எழுதிப் போட்டன். இஞ்சை உறுதி கிடக்கு. தலையணையின் கீழிருந்து உறுதியை எடுத்து என்னிடம் தந்தார்.

என் வீட்டுக் கதையை அவரிடம் சொனனேன். நகை மூட்டையையும் காட்டினேன். பெரியவர் சொன்னார்... மகனே என் முடிவு கிட்டி விட்டது. இந்தப் பிஞ்சு முகம் வாடாமல் வாழ ஒரு அம்மாதான் தேவை. நீ மறுக்காதே! அவர் சொல்லி முடியவும் அருகிலிருந்து கோயில் மணியும் ஒலித்தது.

தமபி கடவுளும் அனுமதி தந்துவிட்டார். நீ யோசியாதை நான் சரியென்று சொல்ல நினைக்கப் பார்வதியும் வந்து அருகில் நின்றாள். அவள் முகம் தெளிவாயிருந்தது. 'சாமியார் சொல்வது போல நானும் இந்த இடத்தை விட்டுப் போகும் காலம் வந்திட்டுது.

அவள் சொன்னபோது அந்த பிஞ்சு முகத்தில் தெய்வக்களை வீசியது. பார்வதி குடிசைக்குள்ளே போனாள். ஒரு சிறிய மூட்டையோடு வெளியே வந்தாள் சாமியாரை விழுந்து வணங்கினாள். நானும் திடீரென அவரின் கால்களிலே விழுந்து வணங்கினேன். என் மனம் இலேசாகி விட்டது.

சாமியாரை உற்றுப் பார்த்தேன். அவர் கடைக்கண்ணில் கண்ணீர் துளிர்த்திருந்தது. பார்வதியின் கையைப் பற்றிக் கொண்டு புதிய தெம்புடன் நடந்தேன். வீட்டு வாசலை அண்மித்தபோது வாசலில் என் மனைவி நின்றாள். அவ ளைக் கண்டதும் பார்வதி ஓடிப்போய் அம்மா என்று கட்டியணைத்தாள்.

மனைவியின் முகம் மலர்நதது. அவளை தழுவிக் கொண்டு உள்ளே போனாள். வாசலுக்கு மேலே படத்தி லிருந்த என் மகள் சிவகாமி புதியதொரு முறுவல் பூத்து நின்றாள்.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# உடல் உழைப்பில் பெண்கள்

இயற்கையின் படைப்பில் ஆணுக்கு எந்தவகையிலும் குறைவுபட்டவளாகப் பெண்ணைக் கருதிவிடமுடியாது. இந்த நிலையில் பெண்களைப் பெண்மையைக் குறைத்தும், இழிவாகவும் கருதுகின்ற பழமைவாதச் சிந்தனைகள் தற்போதும் இறுக்கமுடையதாகவே இருக்கின்றன.

பெண்மை பற்றிய இத்தகைய கருத்துக்களை எதிர்த்து, பெண்ணியம் பற்றியும், பெண்ணின் விடுதலை பற்றியும் இவர்களின் மத்தியில் இருக்கவே செய்கின்றார்கள்.

இந்த இருநிலைப்பட்ட கருத்துக்களுக்கு மத்தியில் மூன்றாவதான கருத்து ஒன்றும் காணப்படுகின்றது.

பெண்கள் கலை, இலக்கியம், பண்பாடு, விஞ்ஞானம், விளையாட்டு, மருத்துவம், விணவெளி என்பவற்றில் சாதனைபடைத்து விட்டனர். பெண்களுக்கு பூரண சுதந்திரம் கிடைத்துவிட்டது என்பதாக இத்தகைய கருத்துக்களைக் கூறுகின்றனர்.

உண்மையில் பெண்கள் அண்மைக் காலங்களில் பல துறைகளில் சாதனைகள்



பெற்றுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், ஒரு சிலரது சாதனைகளை வைத்துக்கொண்டு பெண்களுக்கு சமூகத்தில் உரிய அந்தஸ்து கிடைத்துவிட்டதாகக் கூறுவது வெற்றுரைகளேயாகும்.

சமுதாயத்தின் ஒழுங்கிலும், பொருளாதாரத்திலும் எவ்வளவு தூரம் பெண்களின் பங்களிப்பும், சுதந்திரமும் உள்ளது என்பது தான் முக்கியவிடயமாக இருக்கின்றது.

பெண்கள் யாவரும் குடும்பம், பொருளாதாரம், பாண்பாடு என்பவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு கணமும் இயந்திரமாகவே செயற்படுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதையே வாழ்வில் காண்கின்றோம்.

மேற்குலக நாடுகளுடன் ஒப்பிடுகையில்- மூன்றாம் உலக நாடுகளில் வாழ்கின்ற பெண்களின் கல்வி, சமுதாயவாழ்வு, உரிமைகள் என்பவற்றில் ஆண்களைவிடப் பெண்கள் இரண்டாம் தரமாகவே மதிக்கப்படுகின்றனர்.

பழமைவாதச் சிந்தனைகளும் மூன்றாம் உலக நாடுகளில் காணப்படுகின்ற சமூகங்கள் அனைத்தும் ஆணாதிக்கக் கட்டுப்பாட்டுக்குள் இயங்குகின்றமையுமே இவற்றுக்குக் காரணமாகக் கூறமுடிகின்றது.

பெண்களின் உடலுழைப்பு, நாட்டின் பொருளாதாரத்துக்கு பெண்கள் வழங்கும் பங்களிப்பு என்பன மேற்குல நாடுகளைக் காட்டிலும் பலமடங்கு அதிகமாகவே மூன்றாம் உலக நாடுகளில் காணப்படுகின்றன.

இந்த நாடுகளிலிருந்து அதிகமான பெண்கள் மத்தியகிழக்கு நாடுகளுக்கும், ஏனைய மேற்குலக நாடுகளுக்கும் வேலைவாய்ப்புத் தேடிச் சென்றுள்ளமை இந்தவகையில் குறிப்பிடக்கூடியதொன்றாக விளங்குகின்றது.

வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் இத்தகைய பெண்கள் கடும் உழைப்பில் ஈடுபட்டு வந்தபோதும் குடும்பத்திலும், சமூகத்திலும் சமத்துவமாகவோ, சரிசமமாகவோ ஆண்களுடன் கணிக்கப்படாத நிலையே நீடித்து வருகின்றது.

கீழைத்தேச நாடுகளின் பொருளாதார நிலைப்பாடு பெண்களின் உடல் உழைப்பை அதிகரிக்கச் செய்துள்ளது. இந்த நாடுகள் விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதனால் பொருளாதாரத்தைக் காப்பாற்றுவதிலும், உழைப்பிலும் பெண்களின் உடல் உழைப்பே பிரதான இடத்தைப் பிடிக்கின்றன எனலாம்.

பெருந்தோட்டங்கள், வயல்கள், பெரும் பண்ணைகளில் மட்டுமன்றி சாதாரண விவசாயக் கிராமங்களிலும்கூட பெண்களே அதிலும் உடல் உழைப்பில் ஈடுபடுகின்றார்கள்.

பெண்கள் மேற்குறித்த இடங்களில் மட்டுமே வேலைபுரிகின்றார்கள் என்றில்லை. குடும்பங்களில் பெண்களுக்கென பழமைவாதக் கருத்துக்களின் ஊடாக ஒதுக்கப்டும் வேலைகளையும் பெண்களே தனித்துச் செய்துமுடிக்க வேண்டியுள்ளது.

பொருளாதாரத்தில் அடிமட்ட நிலையிலுள்ள எத்தனையோ குடும்பங்களில் ஆண், பெண் இருபாலாரும் சரிநிகராக உழைப்பில் ஈடுபடுகின்றனர். உழைப்பு முடிந்து வீடு சேர்ந்ததும் பெண்ணுக்கு என ஒதுக்கப்பட்டிருக்கும் அத்தனை வேலைகளையும் அவளே தனித்துச் செய்கின்றாள்.

பெண்கள் இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்க, ஆண் தனது உடற் களைப்பைப் போக்க ஓய்வெடுத்துக்கொள்கின்றான்.

பெண் ஓய்வில்லாமல் உழைக்கும் இத்தகைய உடல் உழைப்புக்கு எந்தவித பெறுமதியும் அளிக்கப்படுவதில்லை. ஊதியம் கணக்கிடப்படுவதில்லை. இங்கு ஆணுக்குரிய சுதந்திரமும், ஓய்வும் பெண்ணுக்குக் கிடைப்பதில்லை என்ற உண்மை நிலையை எவரும் உணர்வதில்லை.

இந்த விடயத்தில் பெண்கள்கூட மௌனமாகவே இருக்கின்றனர். தாங்கள் பெண்கள் என்ற நிலையில் இவ்வாறான வேலைகளைச் செய்து முடிப்பவர்களாகவே இருந்து வருகின்றனர்.

பெண்களின் உடல் உழைப்புக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படுவதில்லை. ஊதியம் வழங்கும் விடயத்திலும் பெண் ஒதுக்கப்பட்டவளாகவே காணப்படுகின்றாள்.

ஒரே தரத்திலான வேலையை ஆண், பெண் இருபாலாரும் இணைந்து செய்து முடிக்கும் போதுகூட ஆணுக்கு உயர்ந்த ஊதியம், பெண்ணுக்குக் குறைந்த ஊதியம் எனத் தரம்பிரித்துக் கொடுப்பது இந்தக் காலத்தில் வழமையாகக் கைக்கொள்ளப்படுகின்றது.

செய்யப்படும் வேலையின் தரம், அதற்காகச் செலவிடும் நேரத்தைக் காட்டிலும் ஆண், பெண் என்ற பாகுபாடே ஊதியத்தின் பெறுமதியைத் தீர்மானித்து விடுகின்றது.

பொருளாதாரச் சுரண்டல் மட்டுமன்றி பெண் என்ற பால்நிலை வேறுபாடும், ஒடுக்குமுறையும் இங்கே நடைமுறையாக்கப்படுகின்றமையைக் காணலாம்.

பெண் பணத்தைச் சம்பாதித்துக் கொண்டாலும் அவற்றைச் செலவழிப்பதில் தயக்கத்துடனேயே செலவழிக்கின்றாள். ஆண் ஒருவன் தான் உழைக்கும் ஊதியத்தில் எத்தனை வீதத்தைச் செலவழித்தாலும் பாதகமில்லை. அதேயளவு வீதத்தைப் பெண் செலவு செய்யும்போது அதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்படுகின்றது.

தந்தை, கணவன், பிள்ளை எனப் பெண்ணின் உழைப்பில் தலையிடுபவர்களும், பணத்தை அவர்களே கையாள்வதும்கூட இடம்பெறுகின்றது.

குடும்பம் என்ற நிலையில் இருவரும் இணைந்து, ஒரு குழந்தையை உருவாக்குகின்றனர். ஆனாலும், அந்தப் பிள்ளையை வளர்ப்பதில் இருந்து, சமூகத்துக்கு ஏற்ற ஒருவராக மாற்றும்வரை அத்தனை பொறுப்பும் தாய் என்ற நிலையில் பெண்ணுக்கே உரியதாகக் கூறப்படுகிறது.

பிள்ளையை ஆளாக்கும் பெரும் பொறுப்பிலிருந்து ஆண் விலகிவிடுகின்ற தன்மையையே காணமுடிகின்றது.

பெண் சுதந்திரம், விடுதலை என்பவற்றுக்கு முக்கியமாக வேண்டியது, பெண்ணைச் சரியாகப் புரிந்துகொள்ளும் பார்வையாகும்.

குடும்பம், சமூகம் என்பனவற்றில் பெண்ணின் பங்களிப்பு எவ்வளவு தூரம் உள்ளது. தன்னை எவ்வாறு குடும்பத்துக்காகவும், சமூகத்துக்காகவும் செயற்படுத்துகின்றாள் என உணரவேண்டும்.

பெண்கள்மீது திணிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், வேலைப்பாடுகள் யாவற்றிலிருந்தும் சமத்துவ் நோக்கில் பெண்கள் விடுவிக்கப்படவேண்டும். குடும்பத்தின் பொருளாதாரம், அன்றாடவாழ்வு, ஒழுங்கு, பாதுகாப்பு யாவற்றிலும் ஆண், பெண் இணைந்து செயற்படுதல் வேண்டும்.

இவ்வாறு செயற்படுவதன் மூலமே குடும்பம், சமூகம் என்பவற்றில் வேரூன்றி இருக்கும் பெண் அடக்குமுறை ஒழிக்கப்படுவதுடன், பெண்ணுக்குரிய சுதந்திரமும், விடுதலையும் அடிப்படையில் உறுதிப்படுத்தப்படமுடியும்.


பெண் உடல் உழைப்பு குறைக்கப்படுவதுடன், இரண்டாந்தரப் பார்வையிலிருந்தும் அவள் விலக்கப்படுவாள். ☆

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# பட்டினிச்சாவிலிருந்து மக்களை பொருண்மியம் காப்பாற்றியது

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

போராட்டம் தொடங்கிய ஆரம்ப காலத்தில் இருந்து தேசியத் தலைவர் - பேரெழுச்சி பெற்று உருவாகி வரும் எங்கள் தேசத்திலே, எங்கள் மக்களின் தேவைகளையும், துறைசார் வளர்ச்சிகளையும் ஏற்படுத்திக் கொள்வதற்காக பல்வேறு கட்டமைப்புக்களைப் போராட்ட சூழலிலேயே கட்டியெழுப்பி இருக்கின்றார்.

அந்த வகையில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் - போராட்ட சூழலிலும் எங்கள் மக்களின் வாழ்வு நிலையை மேம்படுத்திக் கொள்வதற்கும், போர்ச் சூழலில் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் எமது மக்களுடைய வாழ்வு நிலையைப் பாதுகாத்துக் கொள்வதற்குமான பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வந்திருக்கின்றது என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வட்டக்கச்சியில் நடைபெற்ற பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாய தொழில்நுட்பக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

போராட்ட சூழலில் பல்வேறு நெடுக்கடிகளுக்கு முகம் கொடுத்து, எமது மக்கள் உணவுத்தடை, பொருளாதாரத்தடை, கோரமான யுத்தம் எனப் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து இந்த மண்ணில் எப்படி வாழ்ந்தார்கள் என்பது வியப்பாக எல்லோராலும் பார்க்கப்படுகின்றது.

அந்தக்கால கட்டத்திலும் தேசியத் தலைவரின் வழிகாட்டலிலே பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின கொள்கையாக எமது பொருளாதாரத்தை, ஏனையோரில் தங்கி நிற்கும் பொருளாதாரத்திலிருந்து விடுபட்டு, தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கி எமது தேசம் உறுதி எடுத்துக்கொள்வதற்கு- வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்வதற்கு - சுய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு - பலவேலைத் திட்டங்களைக் கடந்த காலங்களிலே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டிருந்தது.

இந்த நிறுவனம் போர்ச்சூழலில் எமது மக்களைப் பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்றுவதற்கு பெரும் பங்காற்றியது.

எம்மைப் பொறுத்தவரையில் இன்று நடைபெறுகின்ற கண்காட்சி ஒரு புதுமையானது தான். ஏனெனில், நாங்கள் ஒன்றுமே இல்லாமல், இந்த மண்ணிலே எமது சுய முயற்சிக்கூடாக உற்பத்திகளை மேற்கொண்டிருக்றோம்.

இன்று சமாதானச் சூழல் ஏற்பட்டு இருக்கிறது. இந்த வேளையில் புதிய தொழில் நுட்பங்கள் புதிய முறைமைகளை அறிமுகப் படுத்துவதையிட்டு, எமது மக்கள் நிச்சயமாக மகிழ்ச்சி அடைவார்கள்.

எமது தேசத்திலும், எமது பொறுப்பாளர் குறிப்பிட்டது போன்று எமது எதிரிகள் மக்களை கொல்கின்ற பணியோடு மட்டும் வரையறுத்துக் கொள்ளவில்லை.

எமது தேசத்தில் இருக்கிற அனைத்தின் மீதும் கொடிய யுத்தத்தைச் செலுத்தி இருந்தார்கள்.

கால்நடை, கடல், தரையால் வாழ்கிற உயிரினங்களிலிருந்து அனைத்துமே அவர்களது இலக்காக கப்பட்டது.

இந்த வகையில், வட்டக்கச்சி பண்ணைகூட யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு, சின்னா பின்னமாக மிகமோசமாகச் சிதைக்கப்பட்டிருந்தது.

அவர் கூறியதுபோல் பயிர்கள் கூட உற்பத்தியாகுவது மிக கஷ்டமாக இருக்கிறது. இங்கு நச்சு இரசாயனங்கள், வெடிமருந்துகள் எல்லாம் இந்த மண்ணோடு கலந்திருக்கிறது என்பது உண்மையாக இருக்கலாம்.


அவர்களுடைய கண்ணுக்கு எமது மக்கள் மட்டுமல்ல, எமது தேசமே எதிரியாக இருந்தார்கள். முழு அளவிலே சிதைக்கப்பட்ட இந்தத் தேசத்தை நாம் கட்டி எழுப்பிக்கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில், உண்மையிலே இன்று எமது தாயகத்தில் இருக்கும் அதிகாரிகள், தலைவர்கள் - எமது மக்கள் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அனைத்தும் இணைந்து, இன்றைய சூழலில் எமது மக்களுக்கு, உற்பத்தி விருத்தியை, வளர்ச்சியை, புதிய முறைகளை, தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாக, முயற்சி உள்ள மக்களுக்கு பெரிய ஆற்றலை மேம்படுத்தக் கூடியதாக இந்தக் கண்காட்சியை ஒழுங்கு படுத்தி இருப்பதையிட்டு, எமது தேசியத் தலைவர் சார்பாக அனைவருக்கும் எமது மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இந்தப் பண்ணை மோசமாகச் சிதைக்கப்பட்டிருந்த நேரத்திலே, இடம் பெயர்ந்த மக்கள் இந்த சமாதான காலத்திலே யுத்தத்துக்கு முகம் கொடுத்த இந்த மக்களையும், தேசததையும் பார்ப்பதற்கும், ஆறுதல் கூறுவதற்கும், பல உதவிகளைச் செய்வதற்கும் இங்கே வருகை தந்திருந்தார்கள் .

பல்வேறுபட்ட தேவைகளை அனைத்து துறைகளிலுமே புலம் பெயர்ந்த மக்கள் தாங்கள் அங்கே பெற்ற அனுபவங்கள் வளங்களைக் கொண்டு வந்து, எங்களுடைய தேசத்திலே செலுத்த வேண்டும் என்ற நோக்கோடு பல பங்களிப்புக்களை செய்து வருகின்றார்கள்.

பல்வேறு இன்னல்களின் மத்தியிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல சவால்களை எதிர்கொண்டு முன்னேறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இன்று புலம் பெயர்ந்த மண்ணில் வாழ்கின்றவர்கள்கூட பலர் உயர்வடைந்திருக்கிறார்கள் எனத் தெரிவித்தார்.



வன்னிப் பதிவுகள்

### ஒலுமடு மக்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒலுமடு, புளியங்குளம் கிராமத்திலிருந்து படை நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து, வேறு இடங்களில் வாழ்ந்து - மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு இதுவரை மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக மாவட்ட செயலகத்துக்கு எடுத்துக் கூறியும், எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கிராம மக்கள விசனம் தெரிவித்தனர்.

### புனித யூதாததேயு ஆலய திருவிழா

(செம்பியன்பற்று)

செம்பியன்பற்று - நெல்லியான் புனித யூதாததேயு திருவிழா இன்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது.

சனி மாலை திருப்பலியும் நற்கருணை சுற்றுப் பிரகாரமும் நடைபெறவிருக்கிறது.

மறுநாள் காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சுரூப சுற்றுப் பிரகாரமும் நடைபெறவுள்ளது. (21)




நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் திறந்து வைக்கப்பட்ட தமிழீழ வைப்பகத்தின் ஊரகக்கிளை அலுவலகத்தின் பெயர்ப்பலகையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் திரைநீக்கம் செய்வதைப் படத்தில் காணலாம்.
படம் : ரமணன்

### முல்லைத்தீவு கடற்பரப்பில் மீனவர்கள் மீது தாக்குதல்

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் முல்லைத்தீவு கடற்பரப்பில் இருந்து 4 பேருடன் கடற்தொழிலுக்குச் சென்ற படகினை 15 கடல் மைல் தூரத்தில் வைத்துக் கடற்படையினர் தாக்கியதில் படகு நீரில் மூழ்கியது. படகில் இருந்த நால்வரும் நீந்திக் கரையை வந்தடைந்துள்ளனர்.

இந்தப் படகினை அண்மித்த கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுப் படகில் இருந்தவர்களைக் கடலில் குதிக்குமாறு கூறி படகினைத் தாக்கி மூழ்கடித்ததாகக் கூறப்படுகிறது.

## கிளிநொச்சி வானொலி மன்றத்தின் மாதாந்த முத்தமிழ் கலையரங்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அரசியற்துறையினர் ஆதரவில், புலிகளின் குரல் கிளிநொச்சி வானொலி மன்றம் நடாத்தும் புலிகளின் குரல் மாதாந்த முத்தமிழ் கலையரங்கம் - இன்று மாலை 7.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், ஈகைச்சுடரை பொன்.தியாகம் ஏற்றி வைப்பார். அகவணக்கத்தை தொடர்ந்து - வரவேற்புரையை ஈ.இராஜேஸ்வரனும், தலைமையுரையை பொன்.காந்தனும் அறிமுகவுரையை ரீ.தவபாலனும், சிறப்புரையை கவிஞரும் படைப்பாளியுமான பாலசபேசனும் நிகழ்த்துவர்.

சுகன்யாவின் வரவேற்பு நடனமும், சுதர்சினியின் நடனமும், கிளிநொச்சி காந்தி நிலைய மாணவர்களின் "முகம் தெரியா பூக்கள்" நாடகமும், ஜோசப் பார்க் இளையோர் மன்றத்தினரின் சமூக நாடகமும், போராளி வெற்றிச் செல்வியின் நெறியாள்கையில் - புலிகளின் குரல் கலைஞர்களும், மகளிர் கலை பண்பாட்டு கலைஞர்களும் இணைந்து வழங்கும் "முற்கோடு" நாடகமும், மகளிர் கலை பண்பாட்டு கழகம் வழங்கும் "சங்க நாதம்" என்பனவும் நடைபெறவுள்ளது.

### ஆனைவிழுந்தானுக்கு தபால் விநியோகிப்பவர் இல்லை

ஆனைவிழுந்தான் கிராமத்துக்கு இதுவரையில் தபால் விநியோகிப்பதற்கு எவரும் நியமனம் செய்யப்படவில்லை.

மேலும் கடந்த 20 வருடங்களாக ஓரிடத்தில் வைத்தே மக்கள் செல்லும் பட்சத்தில் தபால் விநியோகிக்கப்படுகின்றது.

இதனால் தகவல்கள் குறித்த நேரத்தில் மக்களைச் சென்றடைவதில்லை என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டபோதும், இதுவரையில் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லையென அறியமுடிகின்றது.

### புதுக்காடு - தாளையடி வீதி திருத்தும் பணிகள் ஆரம்பம்

கடந்த ஆறு மாதங்களுக்கு முன் முழுமையாகத் திருத்த, புதுக்காடு - தாளையடி வீதியிலுள்ள குன்று குழிகள் தாரிட்டு, திருத்தும் பணிகளில் வீதி அவிபிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் 7 கிலோமீற்றர் நீளமான இந்த வீதி - வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தை ஏ-9 பிரதான வீதியுடன் இணைக்கும் பிரதான வீதியாகும். (21)

## கல்வி அபிவிருத்திக்கு அரசாங்கம் எந்த உதவிகளும் வழங்கவில்லை

### கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் தெரிவிப்பு

(வவுனியா)

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் - தமிழர் தாயகக் கல்வி அபிவிருத்தியில் முழுமூச்சுடன் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார் என்று தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வவுனியா கனகராயன்குள மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

படையினர் வன்னி மண்மீது மேற்கொண்ட ஜெயசிக்குறு படை நடவடிக்கைக்கு எதிராகச் சமராடி, வித்தாகிய மாவீரர்களின் ரத்தம் சிந்தி மீட்டெடுக்கப்பட்ட இடத்தில் எதிரிகளால் அழிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் புதிய கட்டடத் தொகுதி திறக்கப்படுவது நிறைவுக்குரியது.

போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு இரண்டரை ஆண்டுகள் கடந்த நிலையில் தமிழர் தாயகப் பகுதிகளில் கல்வி அபிவிருத்திக்கு அரசு எந்தவித உதவிகளையும் செய்யவில்லை.

அரசாங்கம் 1970 ஆம் ஆண்டுகளில் தரப்படுத்தல் நடைமுறையைக் கொண்டுவந்து, தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் தடைகளை ஏற்படுத்தி வருகின்றது.

இன்று தமிழ் மாணவர்களின் கல்வித்தரத்தை சிதைப்பதில் அரசு முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றது. அரசின் இந்தச் செயற்பாடுகளை இனம் கண்டு, அதற்கெதிராக போராட வேண்டிய தேவை தமிழ்க் கல்விச் சமூகத்திடம் உள்ளது.

மாணவர்கள் போர்ச் சூழலைக் காரணம் காட்டி, கல்வியில் பின்தங்கி விடாது, தடைகளை எதிர்கொண்டு கல்விப் பாதையில் முன்னேற வேண்டும். அரசு உதவிகள் புரியும் என்று நம்பியிராமல், சொந்த முயற்சியை கல்விப்பாதையில் செலுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் முற்பகல் 10.30 மணியளவில் பாடசாலை முன்றலிலிருந்து மாணவர்களின் அணியிசையுடன் விருந்தினர்கள் பாடசாலை வளாகம் நோக்கி அழைத்துச் செல்லப்பட்டனர்.

விழாச்சுடரை வவுனியா அரச அதிபர் கே.கணேஸ் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் ஏற்றிவைத்தார்.

புதிய கட்டத்தை தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், அரச அதிபர் கே.கணேஸ் ஆகியோர் நாடாவை வெட்டி திறந்து வைத்தனர்.

கட்டடப் பெயர்க்கல்லினை வவுனியா அரச அதிபர் கே.கணேஸ் திரைநீக்கம் செய்து வைத்தார்.

திறப்பு நிகழ்வு நினைவாக மரநடுகையும் இடம்பெற்றது. மரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டினர்.

அரங்க நிகழ்வுகள் பாடசாலை அதிபர் மா.ஆனந்தகுமார் தலைமையில் இடம்பெற்றன.

வவுனியா வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் தண்டாயு தபாணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், ச.கனகரத்தினம், சிவநாதன் கிஷோர், வவுனியா மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் சு.ஞானம், நிகொட் மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ம.கிருபாசுதன், மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல், அரச அதிபர் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை*
*அதிர வருவதுஓர் நோய்*

திருக்குறள்

# நமது நோக்கு

## நம்பிக்கைகளும் திருப்பங்களும் சமாதானத்தைக் கொண்டு வருமா?

தேக்க நிலையடைந்துள்ள சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளின் எதிர்காலம் குறித்த அச்சம் பரவலாக எழுந்துள்ள சூழலில் மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பமாகக்கூடும் என்ற பீதியில், மக்கள் அன்றாடம் ஊடகங்கள் தரும் செய்திகளின் ஊடாக சமாதானம் தொடர்வதற்கான சமிக்ஞைகள் ஏதும் உண்டா எனத் துருவித் துருவித் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் இலங்கையரசின் சமாதான முயற்சிகள் மீதான நம்பிக்கை எப்போதோ வேரற்றுப் போய்விட்டாலும் கூட, சர்வதேச சமூகம் மீதான நம்பிக்கை அற்ப சொற்ப அளவிலேனும் இன்னும் இருப்பதுதான் அவர்கள் இன்னமும் சமாதானம் குறித்த எதிர்பார்ப்புடன் இருக்கக் காரணமாகும்.

கடந்த காலங்களில் இலங்கையரசுகள் சமாதானப் பாடலை இசைக்கத் தொடங்கிய போதெல்லாம் ஏற்பட்ட சமாதானச் சூழலை புயலுக்கு முந்திய பேயமைதி நிலையாகவே தமிழ் மக்கள் உறுதியாக நம்பி அதுகுறித்த நம்பிக்கையை அவர்கள் தவிர்த்தே வந்தார்கள். இந்தியா எமது பிரச்சினைக்குத் தீர்வு காண வருவதாகக் கூறிக்கொண்டு படையுடன் எம் மண்ணுள் நுழைந்தபோது எமது மக்களுக்கு சமாதானம் அல்லது அமைதித் தீர்வு குறித்த நம்பிக்கை பெருமளவில் இருந்த தென்னவோ உண்மைதான். ஆனால், இந்தியா காப்பாற்றும் அல்லது பாதுகாக்கும் என்ற அவர்களின் அபரிமிதமான எதிர்பார்ப்பு ஒருவிதமான மாயைதான் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள அதிக காலமெடுக்கவில்லை. வெறும் மூன்று மாதங்களுக்குள்ளேயே எமது பிரச்சினையை தனது அரசியல் - இராணுவ அபிலாஷைகளுக்குக் கருவியாகப் பயன்படுத்த முயன்ற இந்தியாவின் துரோகத்தனம் எமது மக்களுக்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

அதன்பின்னர் நடந்து முடிந்த சமாதானப் பேச்சுக்களெல்லாம், தமிழ் மக்களை ஏமாற்ற சிங்கள அரசுகள் வகுத்த் தந்திரோபாய வியூகங்களாகவே அமைந்தன.

'உரிமைகள் பற்றிப் பேசத்தொடங்குவோம்' என்று கூறி பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்தவர்கள், சலுகைகளைப் பொதிகளாக்கி அதனையே தீர்வு எனக் கூறி ஏமாற்ற முயன்ற வரலாற்றுப் பாடம் தமிழ் மக்கள் கற்ற அனுபவப் பாடமாகும்.

சிங்களப் பேரினவாதச் சிந்தனை தென்னிலங்கை அரசியல் தலைமைகளிடம் எப்போது பூண்டோடு அற்றுப் போகுதோ, அன்றைக்குத்தான் அவர்கள் சமாதானத்தை - சமாதானமாகப் பேச ஆரம்பிக்கும் மனித உணர்வை கொண்டவர்களாவார்கள் என்பதே தமிழ் மக்கள் கற்ற பட்டறிவுப் பாடமாகும்.

ஆனால், அப்படியானதொரு சிந்தனை மாற்றம் தென்பகுதி சிங்கள அரசியல் தலைமைகளுக்கு இப்போதைக்கு ஏற்படும் சாத்தியத்துக்கான சமிக்ஞைகள் எதுவும் இப்போதைக்கு... ஏன் இந்த மிலேனியத்திற்குள் தென்படுமா என்பது சந்தேகம் தான்.

- தென்பகுதி அரசியல் யதார்த்தம் அதனையே உறுதி செய்வதாக உள்ளது.

- பொது உடமை - மற்றும் சமதர்மம் பற்றியும் மக்கள் புரட்சிபற்றியும் பேசியவர்களும், பௌத்த தர்மம் போதித்வர்களும் நாடாளுமன்ற கதிரையில் அமர்ந்தவுடன் இனவாத ஞானம் பெற்றவர்களாகி சமாதானத்திற்கெதிரான தீவிர பிரசாரகர்களாகி தமிழ் மக்களுக்கு எதிராக யுத்த பிரகடனம் செய்யும் நிலைக்கு மாறியுள்ளதன் விளைவே இன்றைய இலங்கையின் குழப்ப நிலைக்கு முழுமுதற் காரணமாகியும் உள்ளது.

- சமாதானம் என்ற சொல் பேரினவாதிகளுக்கு ஒவ்வாமையை உண்டுபண்ணும் ஒன்றாகிவிட்டுள்ள நிலையில் அவர்களால் மன விருப்புடன் சமாதானப்பேச்சுவார்த்தை மேசையில் இயல்பாக அமர்ந்து உரையாட முடியமா?

- முடியும் என எவரும் நம்பினால் அவர்கள் கடந்த கால இலங்கையின் வரலாற்றை அறியாதவர்களே ...!

- ஆனாலும், இன்னமும் சமாதானம் பற்றி பேசுவதற்கான சந்தர்ப்பத்தை அரசுக்கு வழங்க தமிழ்மக்களும் தமிழர் தலைமையும் தயாராக இருக்கிறதென்றால் அது அரசின் மீதான நம்பிக்கையினாலல்ல...! இன்று சமாதான முயற்சிகளுக்காக தமது சோர்வற்ற - அயராத உழைப்பையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவரும் சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக்கையினால் மட்டுமே.

அரசால் - ஆளும்கட்சிகளால் - அதிகாரவலுக்கொண்ட ஜனாதிபதியால் பேரினவாத சிந்தனை மிகு வெறியர்களால் நோர்வேயின் முயற்சிகளுக்கும், அதன் சமாதான ஏற்பாட்டாளருக்கும் ஏற்பட்ட மனத்தாக்கம் - அவமானம் அகியவற்றை ஒரு புறம் ஒதுக்கி விட்டு அந்த நாடும் அதன் சமாதானம் பணியாளர்களும் இன்னமும் நம்பிக்கையோடு முயற்சிகளைத் தொடர்கிறார்கள் என்றால் அவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டியது நமது கடமையாகும்

சமாதான முயற்சிகளில் சில திருப்பங்கள் விரைவில் ஏற்படலாம் என நோர்வே அரசு நம்புவதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஆனாலும், இப்படி எத்தனையோ திருப்பங்கள் குறித்த செய்திகளை தமிழ் மக்கள் கேட்டு சலித்து போனவர்கள் என்பதால் அது அவர்களுககு சத்தற்ற வெற்று செய்தியாகவே இருக்கும்.

வெறுமனே நம்பிக்கைகளுடன் கடந்த இரண்டரை ஆண்டு கால சமாதானச் சூழல் காலமாகி விட்ட நிலையில், புதிய திருப்பங்கள் குறித்து கூறப்படும் ஊகங்கள் எதுவும் அற்புதங்களை நிகழ்த்திவிடப்போவது கிடையாது என்பது மட்டும் உறுதி.

- காலம் நமக்கு கற்பித்துள்ள அனுபவப் பாடம் இது தான்.!

- உரிமைகளை யாசித்து பெறுவோராக தமிழ் மக்கள் இனியும் இருக்கமாட்டார்கள் என்பதை இனி வரும் நிகழ்வுகள் உணர்த்தியே தீரும் .

## நாடும் நடப்பும்




# இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கு மூன்று மாதங்களின் பின்னரே பயிற்சி!

### அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசசேவையில் இரண்டாவது பட்டியல் மூலம் பயிலுநர்களாக இணைத்துக்கொள்ளப்படவுள்ள பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் யாவும் மூன்றுமாதங்களின் பின்னரே ஆரம்பமாகும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற முதலாவது பட்டியல்மூலம் பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனம் பெறுவோருக்கான பயிற்சிநெறி ஆரம்பவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்கு முதற்கட்டமாக ஐந்து இடங்களில் பயிற்சிகள் நடைபெறவுள்ளன. இன்றுமுதல் நடைபெறும் யாழ்.செலயகத்தைச் சேர்ந்த மூத்த நிர்வாகசேவை அதிகாரி கனகரட்ணம் இந்தப் பயிற்சிக்கான முழுச் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருப்பார்.

இதனைவிட புதிதாக நிர்வாக சேவைக்குள் உள்வாங்கப்பட்டிருக்கும் 8 பேர் ஒவ்வொரு பயிற்சி நிலையங்களுக்குமான இணைப்பாளர்களாகச் செயற்படவுள்ளார்கள். இந்தப் பயிற்சிநெறியில் பங்குகொள்வோர் பயிற்சிக்கு ஒழுங்காக வருதல் அவசியம். வரவு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

தற்போது வழங்கப்பட்டுவரும் பயிலுநர் நியமனமானது வெவ்வேறு காலப்பகுதிகளில் வழங்கப்பட்டு பயிற்சிகள் நடைபெற்றாலும், அரசாங்க சேவையில் உள்ளீரப்பதற்கான நியமனம் யாவும் ஒரே திகதியில் அமையும். முதற்கட்டப் பயிற்சி நிறைவு செய்யப்பட்டதும் மூன்று மாத காலத்தின்பின் அடுத்த தொகுதிப் பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும்.

பயிற்சிக்காலக் கொடுப்பனவாக 6 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. பயிற்சிக்கு வருகைதராத நாட்களுக்குரிய கொடுப்பனவு கழிக்கப்படும். இந்தக் கொடுப்பனவுகள் யாவும் அந்தந்தப் பிரதேச செயலகங்களினூடாகவே வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் உரிய ஒழுங்கு விதிகளைப் பின்பற்றாதவர்கள் இடைநிறுத்தப்படுவர்.

இந்தப் பயிற்சியில் கணினிப் பயிற்சிகள், ஆங்கிலப் பயிற்சிகள், நிர்வாகப் பயிற்சிகள் என்பன வழங்கப்படவுள்ளன. இந்தப் பயிற்சிக் காலத்தில் பட்டதாரிகள் தமது திறமைகளை வெளிப்படுத்தவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மா.க.ஈழவேந்தன் தனது உரையில் - தமிழ்மொழி மறக்கப்படும் நிலை இன்று உருவாகியுள்ளது. பட்டதாரிகளாகி இன்று அரச நியமனம் பெறுவோர் நிசசயமாகத் தமிழை வளர்க்கப் பாடுபடுதல் வேண்டும்.

இன்று இலங்கையில் உள்ள பல உயர் பதவிகளில் தமிழர்கள் இல்லாது போயுள்ளனர். இந்த நிலையை இந்தப் பட்டதாரிகள் மாற்றவேண்டும், அரசில் காணப்படும் இந்தப் பாரபட்சத்தை அவர்கள் நீக்கவேண்டும்.

அரசால் வழங்கப்படும் இந்த நியமனத்தைப்பெற்று எமக்குக் கிடைக்கக்கூடியவற்றை நாம் பெறுவோம். ஆனால், தமிழர் தம்மைத்தாமே ஆளும் உரிமையை என்றும் வலியுறுத்துதல் வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் முதற்பட்டியலில் பெயர் வந்த ஐநூறு வரையிலான பட்டதாரிகளும், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் அ.சிவசாமி, வடமாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மகாலிங்கம் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விகனேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ.மோகனதாஸ், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, மா.க.ஈழவேந்தன், யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத் தலைவர் தட்சணாமூர்த்தி உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ப)

## இந்து கலாசார அமைச்சிலிருந்து விலக்கப்பட்டோர் மீண்டும் இணைப்பு

(கொழும்பு)

இந்து கலாசார அமைச்சின்கீழ் சேவையாற்றி பின்னர் விலக்கப்பட்ட 35 பேரும் மீண்டும் சேவையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் அமைச்சர் மகேஸ்வரனின் காலத்தில் பதவிக்குச் சேர்க்கப்பட்டவர்களாவர். பின்னர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் விலக்கப்பட்டனர்.

எனினும் குறிப்பிட்ட 35 பேரும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததன் அடிப்படையில், அவர்களை மீண்டும் பணிகளில் சேர்த்துக்கொள்ளுமாறு உத்தரவு விடுக்கப்படடிருந்தது. இந்தநிலையில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண செயலகத்தில் இயங்கும் இந்து கலாசார திணைக்கள அலுவலகத்துக்கு குறிப்பிட்ட 35 பேரில் 13 பேர் சமுகமளித்தனர்.

## பெற்றோல் விலை மேலும் 2 ரூபாவால் அதிகரிக்கும்

(கொழும்பு)

பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் என்பவற்றின் விலைகளை எதிர்வரும் 7 ஆம் திகதிமுதல் மீண்டு மொருதடவை 2 ரூபாவால் அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்படவுள்ளதாக மசகு எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உலகில் மசகு எண்ணெய் விலைகள் அதிகரித்துவருவதன் காரணமாக இந்த விலை உயர்வு ஏற்படடுள்ளதாகவும்- எனினும் விலையை அதிகரிக்கும் அதிகாரம் பொதுத்திறைசேரிக்கு இருப்பதனால் விலையை அதிகரிப்பதா? இல்லையா என்பது பற்றி உறுதியுடன் கூறமுடியாதிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று மறியல் போராட்டம்

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஊழியர்கள் பங்குபற்றிய மறியற்போராட்டம் ஒன்று நேற்றுக் கொழும்பிலுள்ள 'வோட் பிளேஸ்' என்ற இடத்தில் இடம்பெற்றது.

இந்த மறியல் போராட்டத்தின்போது போராட்டக்காரர்கள் தமது கோரிக்கைகள் யாவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தமக்கு நீதியான தீர்வு விரைவாக வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

ஒரு சில மணி நேரங்களே இடம்பெற்ற இந்த மறியற் போராட்டத்தின்போது, நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களையும் சேர்ந்த சுமார் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்குபற்றினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வீதி திருத்தும் பணிகளுக்கு றோலர் பெறுவதில் சிரமம்

வீதி திருத்தும் பணியில் ஈடுபடுத்துவதற்கு றோலர்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் உள்ள பல வீதிகள் செப்பனிடப்படவேண்டியுள்ளதால், வீதி அபிவிருத்தி அதிகாரசபையும், பிரதேச சபைகளும் இணைந்து இவற்றைத் திருத்தியமைக்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றன. ஆனால், இவற்றைத் திருத்துவதற்கான றோலர் இயந்திரங்களைத் தனியாரிடமிருந்து வாடகைக்குப் பெறவேண்டியுள்ளது. தற்போது ஒரே நேரத்தில் பல வீதிகள் செப்பனிடப்படவேண்டியுள்ளதால், இந்த றோலர்களைப் பெற்றுக்கொள்வதில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய கல்விச் செயன்முறைமையில் தமிழர்களுக்கான புதிய மாற்று

பாலசுப்பிரமணியம் தனபாலன்

இன்று சர்வதேச தேசிய இனங்கள் எல்லாம் தம் எதிர்கால அபிவிருத்தியையும், இருப்பையும் உறுதி செய்யும் நோக்கில் தம் மொழி, கல்வி, மனிதவள விருத்தி தொடர்பான புதிய மாற்றுக்களை, துணிகரமான முடிவுகளை, செயலாற்றுகைகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த நீரோட்டத்தில் நாமும் இணைய வேண்டும்.


தேசிய கல்வி நிறுவக முகப்புத்தோற்றம்

❖ அடுத்த ஆண்டில் பயன்பெற - பயிர் நடுங்கள்.
❖ அடுத்த பத்தாண்டில் பயன்பெற - மரம் நடுங்கள்.
❖ அடுத்த நூறாண்டில் பயன்பெற - புதிய பாடசாலைகளையும், கல்வி நிறுவனங்களையும் உருவாக்குங்கள்.

இந்தத் தீர்க்க தரிசனக் கருத்தியலுக்குச் செயல்வடிவம் கொடுக்க உலக நாடுகள் எல்லாம் தம் அபிவிருத்தியின் அச்சாணியாக கல்வியையே நம்பி - கல்வி ஆய்வு, அபிவிருத்தியினூடு ஆய்வு நிறுவனங்களின் செயற்பாடுகளையும் விஸ்தரித்து வருகின்றன.

கல்வி விடயங்கள், கலைத்திட்ட விருத்தி, கல்வி ஆளணியினர் விருத்தி தொடர்பான ஆய்வுகளை நடாத்தி, புதிய திட்டங்களைச் செயற்படுத்த உலகின் பல்வேறு நாடுகளிலும் இதற்கென நன்கு வளர்ச்சியடைந்த அமைப்புக்களை உருவாக்கியுள்ளன.

உதாரணமாக -

**I.** ஜப்பான் - கல்வி ஆய்வுக்கான தேசிய நிறுவகம் **(NIER)** **(National Institute for Educational Research)**

**II.** சிங்கப்பூர் - கல்வி நிறுவகம் **(NI) (Institute of Education).**

**III.** கொரியக் குடியரசு - கொரியக் கல்வி அபிவிருத்தி நிறுவகம் **(KEDI)**

**IV.** இந்தியா - கல்வி ஆய்வு அபிவிருத்திக்கான தேசிய சபை **(NCERT)** **(National Council for Education Research an Traing)**

**V.** அவுஸ்ரேலியா - கல்வி அபிவிருத்திக்கான அவுஸ்ரேலிய சபை **(ACED)** **(Australian Council for Education Development)**

இந்த நோக்கில் இலங்கையில் 1985 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்கச் சட்டப்படி, தேசிய கல்வி நிறுவகம் **(National Institute of Education)** உருவாக்கப்பட்டது.

இது இந்த நிறுவன சபையின் **(Council for the Institute)** அதிகாரத்துக்குட்பட்ட அரசு சார்ந்த தன்னாதிக்கமுள்ள ஓர் அமைப்பாகும்.

### இலங்கைத் தேசிய கல்வி நிறுவகம்

தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தின் மூலம், இந்த நிறுவகத்தின் நோக்கங்களாக - இலங்கையின் கல்வி விருத்திக்கான திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்பாடுகள், எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகக் கல்வியமைச்சுக்கு ஆலோசனை வழங்கல் மற்றும் கல்வியமைச்சினால் அங்கீகரிக்கப்படும் கல்வி விருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பதாகவுள்ளது.


இலங்கையின் பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த எனைய கல்வி முறைமைகளில் முழு நிறைவான செல்வாக்கை, தேசிய கல்வி நிறுவகம் கொண்டுள்ளது.


மேலும் தொடர்ச்சியான கல்விச் சீர்திட்டங்களுக்கு வழிகாட்டுகின்றது. தேசிய கல்வி நிறுவகத்தின் முக்கிய பணியாக -

**I.** நாட்டின் கல்வி முறையின் பல்வேறு விடயங்களிலும் ஆய்வுகளை மேற்கொண்டு, கல்விக் கொள்கையாக்கம் திட்டமிடலுக்கான கருத்தியல்களை வழங்குவது.

**II.** பாடசாலை ஆரம்ப - இடைநிலை - உயர் தரப்பாடங்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகளின் கலைத்திட்ட விருத்தியும், அமுலாக்கமும்.

**III.** கல்வி ஆளணியினரான ஆசிரியர், முதன்மை ஆசிரியர், அதிபர், கல்விப் பணிப்பாளர், கல்வி வளவாளர்களுக்குக் காலத்துக்குப்




பொருத்தமான வாண்மைத்துவப் பயில்வுகளை **(Professional / Training)** வழங்குதல்.

புதிய கல்விச் செயல்நிலை ஆய்வுகள், செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

**IV.** ஆசிரியர் பயிற்சி, கல்விமானி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முகாமைத்துவ டிப்ளோமா, கல்வி முதுமானிப் பட்டங்களை வழங்குதல். உயர் நிலைக் கல்வி ஆய்வுகளை மேற்கொள்ளுதல், ஆய்வு வெளியீடுகளை வெளியிடல்.

**V** கணிப்பீடுகள், தேர்வுமுறைகள், பரீட்சைகள், பாடநூலாக்க நடைமுறைகள், எதிர்காலக் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், நவீன கல்விச் செயல்நெறிகளுக்கு ஏற்ப வெளிநாடுகளின் கல்வி தொடர்பான ஆய்வுகளை அங்கு சென்று ஆராய்தல்.

### தேசிய கல்வி நிறுவக ஒழுங்கமைப்பு

இலங்கையின் மிக முக்கியமான கல்வி ஒழுங்கமைப்பாகவுள்ள தேசிய கல்வி நிறுவகம் - இலங்கையின் கல்விக் கொள்கையாக்க நடைமுறைகளின் முதுகெலும்பாகவுள்ளது.

இது ஒரு பல்கலைக்கழகத்தை விட நாடு பூராகவும் மிகப்பரந்த செயலாற்றுகைகளைச் செய்கின்றது. இந்தச் செயலாற்றுகைகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் இதன் ஒழுங்கமைப்பு உள்ளது.

இவ்வாறான பரந்த ஒழுங்கமைப்பைக் கொண்டு ஒரு பணிப்பாளர் நாயகம், ஆறு உதவிப் பணிப்பாளர் நாயகங்கள், இருபத்து நான்கு துறைசார் பணிப்பாளர்கள், நூற்றுக்கும் மேற்பட்ட செயற்திட்ட அலுவலர்கள், வளவாளர்கள் மற்றும் பொறியியலார், நூலகர், கணக்காளர், பாதுகாப்பு, கண்காணிப்பு, தொழில்நுட்ப தொழிலாளர்கள் என இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டு தேசிய கல்வி நிறுவகம் இயங்கிவருகின்றது.

இந்த இயக்கச் செயலாற்றுகை இலங்கையின் கல்வி, எதிர்காலத் தொழிற்துறை, பொருளாதார விழுமிய அபிவிருத்தி நோக்கியதாக சீராக்கல்கள், முகாமைத்துவ நுண்முறையியல்கள் மூலம் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

மேலும் உள்நாட்டு, வெளிநாட்டு கல்வி நிபுணர்களின் வழிகாட்டலும், நிபுணத்துவ உதவிகளும் தொடர்ச்சியாகக் கிடைக்கின்றன.

### நிபுணத்துவத் திறனாய்வு

இலங்கைத் தேசிய கல்வி நிறுவகம் தொடர்பாகப் பல்வேறு. நுண்முகாமைத்துவத் திறனாய்வுகள், ஆய்வறிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன.

சர்வதேச தரநிர்ணயத்துக்குமைய, அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், இலங்கைத்தீவின் வரலாற்றில் இனப்பாகுபாடு, அரசியல் ரீதியான கல்விப் புறக்கணிப்புகள் வியாபித்துள்ளன. தமிழ்மொழி மூலக்கல்வித் துறையில் பல குறைபாடுகளும், வளப் போதாமைகளும் நிலவி வருகின்றன.

இதற்கு உதாரணமாகத் தேசிய கல்வி நிறுவகத்தையும் கூறலாம்.

தமிழ்மொழி உத்தியோகத்தர்கள் மிகப் பெரும் பற்றாக்குறை நீண்டகாலமாக தேசிய கல்வி நிறுவகத்திலுள்ளது.

தமிழ் மொழிப்பிரிவு அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடுகளே இல்லாத நிலை. புதிய கல்விச் சீர்திருத்தப் பிரயோகங்களில் தமிழ் மொழிப் பாடசாலைகளின் கலைத்திட்டச் செயற்பாடுகளுக்கான ஆசிரிய கைந்நூல்கள், வளங்கள் பற்றாக்குறை நிலவுகின்றது.

தமிழ்ப்பிரதேச மாணவர்களின் கல்விப் பின்னடைவுகளுக்கே தேசிய கல்வி நிறுவகம் காரணமாகின்ற மோசமான நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்மொழிமூல ஆய்வு இதழ்களே இல்லாத நிலையும் காணப்படுகின்றது.

1970 ஆம் ஆண்டுகளிலிருந்து இன்றுவரை - சிங்கள மொழிமூலக் கல்வியுடன் ஒப்பிடுகையில், தமிழ் மொழிக் கல்வி - பெரும் சமவீனங்களைக் கொண்டுள்ளது. இன்று இந்தச் சமவீனங்கள் பல மோசமான தாக்க விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

தமிழ்மொழி வழிக் கல்வி எதிர்நோக்குகின்ற பாரிய பிரச்சினைகள், பின்னடைவுகள் பற்றித் தேசிய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் அரசியல்வாதிகளோ, கல்வியியலாளர்களோ எந்தவித செயலாற்றுகைகளும் அற்ற நிலை காணப்படுகின்றது.

தேசிய கல்வி நிறுவகத்திலும், கல்வியமைச்சிலும் தமிழ் வழிக் கல்வி ஒரு மொழிபெயர்ப்புக் கலாசாரத்தினூடாக அழிந்து வருகின்றது.

சேவையாற்றும் தமிழ் ஊழியர்களும், வினைத்திறனுடன் செயலாற்றுவதில் ஏற்படும் தடைகள், பிரச்சினைகள் இவற்றை நீக்க பல ஆய்வுகளை மேற்கொண்டு துணிகரமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

### மாற்று நிழல் தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழிப் பிரதேச பாடசாலைகளின் கலைத்திட்ட கல்வி அபிவிருத்தியை மேலும் உயர்த்த ஒரு மாற்று தேசிய கல்வி நிறுவகத்தை அமைக்க வேண்டும் என்ற செயன்முறை தொடர்பான வழிகாட்டல்கள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் உட்ணடி நிலைமைகளை அவதானித்து, தடைகளை இனங்காண - ஒரு நிழல் தேசிய கல்வி நிறுவக செயன்முறை ஒன்றையும் தோற்றுவிக்க வேண்டியுள்ளது.

இவற்றினூடாகவே புறக்கணிக்கப்பட்ட தமிழர்களின் கல்வியை விருத்தியாக்க முடியும். உள்ளூர் - சர்வதேச கல்வியாளர்களின் வழிகாட்டல்களுடன் தமிழ்மொழிக் கல்விக் கொள்கையாக்கங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவேண்டும்.

இதற்கு அர்ப்பணிப்பும், தியாகமும் கொண்டவர்களின் செயலாற்றுகைகள் தேசத்துக்குத் தேவையாகவுள்ளன.

# கடத்தல்காரர்களுடன் பேச ரஷ்ய அதிகாரிகள் தீர்மானம்



(ரஷ்யா)

ரஷ்யாவின் பாடசாலையொன்றில் மாணவர்கள் மற்றும் பெற்றோர், ஆசிரியரென 350 பேரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ள கடத்தல்காரர்களுடன் பேச்சுவார்த்தையை நடத்தவுள்ளதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், இவர்களுக்கெதிராக உடனடியாகப் படை நடவடிக்கை எதனையும் ரஷ்யா மேற்கொள்ளமாட்டாதெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

செச்சின்யாவிலுள்ள ரஷ்யத் துருப்பினர் உடனடியாக வெளியேறவேண்டும். செச்சின்யாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள செச்சின்ய போராளிகள் உடன் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கைகளைக் கடத்தல்காரர்கள் முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் கூடிய ஐ.நாவின் பாதுகாப்புசபை - இந்தக் கடத்தல் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளது. அத்துடன் எவ்வித முன்நிபந்தனையும் விதிக்காமல் இவர்கள் விடுதலை செய்யப்படவேண்டுமெனவும் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் முதல் ரஷ்யாவின் தெற்குப் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் - பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர், ஆசிரியர்கள் என சுமார் 350 பேரை முகமூடி அணிந்த ஆயு



தக் குழுவினர் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர்.

சுமார் 17 ஆண், பெண் அடங்கலானோர் வெடிகுண்டுப் பட்டிகளுடன் பெஸ்லான் மாகாணத்திலுள்ள வடக்கு ஒசெஸ்ரியாவில்



உள்ள பாடசாலைக்குள் நுழைந்து, இவர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்துவைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

ஆயுததாரிகள் பாடசாலையைச் சுற்றி கண்ணிவெடிகளைப் புதைத்துவைத்துள்ளதாக நம்பப்படுகிறது. பாடசாலையைச் சுற்றி வளைத்துப் படையினர் தாக்குதல் நடத்துவார்களாக இருந்தால், மாணவர்கள் உட்பட அனைவரையும் சேர்த்து பாடசாலையைத் தகர்க்கப்போவதாக கடத்தல்காரர்கள் எச்சரித்துள்ளனர்.

சம்பவதினம் பாடசாலைகளின் தொடக்க நாளாக இருந்தமையால் பெருமளவான பெற்றோர்களும், பாடசாலைச் சிறுவர்களும் பாடசாலையில் கூடியிருந்ததாகவும், இந்தவேளை வரவேற்பு நிகழ்வு நடந்துகொண்டிருந்த நேரம் ஆயுததாரிகள் திடீரென பாடசாலைக்குள் நுழைந்து அனைவரையும் பணயக் கைதிகளாகப் பிடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்க விமானப்படை தாக்குதல்: மூன்று சிறுவர் உட்பட ஒன்பது பேர் பலி

ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்க விமானப்படை நடத்திய தாக்குதலில் மூன்று சிறுவர்கள் உட்பட ஒன்பது பேர் கொல்லப்பட்டதாக பலூஜா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் ஆறு பொதுமக்கள் காயமடைந்ததாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

பலூஜாவின் தென்பகுதியிலுள்ள வீடொன்றின் மீதே அமெரிக்க விமானங்கள் தாக்குதலை நடத்தியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். ஆனால் இஸ்லாமிய குழுவொன்றின் தலைவரான அபு முசாப் அல் - சர்காவியின் ஆதரவாளர்கள் தங்கியிருந்த வீட்டின்மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக, அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.


நாம் ஒன்பது சடலங்களை இந்தச் சம்பவத்திற்குப் பின் பெற்றோம். இதில் மூன்று சிறுவர்களது உடல்களும் அடங்கும். இந்த உடல்கள் முழுவதும் சிதைவடைந்த நிலையில் உள்ளதால் அவற்றின் அடையாளத் தன்மை குறித்துக் கூறுவது கடினம்.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஆறுபேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பொதுமக்கள் என பலூஜா வைத்தியசாலையின் வைத்தியரான சேப்தீன் தாஹா தெரிவித்தார்.

அமெரிக்க விமானப்படையினரின் தாக்குதலில் இரண்டு வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.




## ஈராக்கில் கடத்தப்பட்ட 3 இந்தியர்கள் உட்பட எழுவர் நேற்றுமுன்தினம் விடுதலை!



(புதுடெல்கி)

ஈராக்கிலுள்ள, குவைத் நிறுவனமொன்றில் பணியாற்றியவேளை இஸ்லாமிய ஆயுதக் குழுவினரால் கடத்தப்பட்ட மூன்று இந்தியர்கள், மூன்று கென்ய நாட்டவர்கள், ஒரு எகிப்தியரென மொத்தம் ஏழுபேர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த எழுவரையும் விடுதலை செய்ய வேண்டுமெனில் ஈராக்கில் இயங்கும் குவைத் நிறுவனத்தை உடன் மூடவேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை கடத்தல்காரர்கள் முன்வைத்திருந்தனர்.

இவ்வாறு தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் கடத்தப்பட்ட எழுவரும் கொலைசெய்யப்படுவரெனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர். இந்த நிலையில் குவைத் நிறுவனம் ஈராக்கிலிருந்து வெளியேறுவதாக அறிவித்தது.

இதனையடுத்து இந்தியர் உட்பட எழுவரும் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டதாக குவைத் நிறுவனத்தின் பெண் பேச்சாளரான அபு - ஜெய்னே நேற்று முன்தினம் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இவர்கள் விடுதலை செய்யப்பட்டதனை இந்திய அரசும் உறுதிப்படுத்தியது. இவர்கள் மூவரும் ஈராக்கிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நலமாக இருப்பதாகவும் அறிவித்தது.

இதற்கு முன்னதாக இந்தியப் பிரஜைகள் விடுவிக்கப்பட்டதனை அராபியத் தொலைக்காட்சியான அல் ஜசீராவும் ஒளிபரப்பியது.

பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டதனை இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமும் வரவேற்றுள்ளார். பணயக் கைதிகளின் விடுதலையால் இந்திய நாடே நிம்மதி அடைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.


## கொங்கிரீட் கலவைக்குள் இளைஞர் சாதனை

ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த மெரிலினி என்ற வாலிபர் உலக சாதனையொன்றை நிகழ்த்தியிருக்கிறார். புடாபெஸ்ட் நகரில் உட்கார்ந்த நிலையில் இவரது கழுத்துவரை கொங்கிறீட் கலவை கொட்டப்பட்டது. பின்பு அதில் தண்ணீர் ஊற்றினார்கள். இறுகிய கொங்கிரீட்டுக்குள் இருக்கும் இவரை ஒரு கண்ணாடிக் கூண்டில் அடைத்து அங்குள்ள ஒரு ஆற்றில் 10 நிமிடம் வரை மூழ்கவைத்தனர்.

10 நிமிடம் கழித்து கண்ணாடிப் பெட்டியைத் திறந்து பார்த்தபோது மெரிலினி எவ்வித பாதிப்பும் இன்றி உயிருடன் வெளியே வந்தார். கின்னஸ் சாதனையில் இது இடம்பெறுகிறது.

அடுத்து இவர் காற்றுப் புகமுடியாத சவப்பெட்டிக்குள் 33 மணிநேரம் அடைக்கப்பட்டிருக்கும் சாதனையை நிகழ்த்தவிருக்கிறார்.

## செச்சினிய ஜனாதிபதி பெயர் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு



செச்சினியாவில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அனு அல்ஹனோவ் வெற்றிபெற்று புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

கடந்த வாரம் செச்சினியாவில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 73.67 வீத வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற அல்ஹனோவ், செச்சினியாவின் ஜனாதிபதி என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

செச்சினிய சட்டப்படி ஒருவர் தேர்தலில் வெற்றிபெற்று அவரது பெயர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதிலிருந்து 30 நாட்களுள் அவர் பதவியினை பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். இதற்கமைய தற்போதைய புதிய ஜனாதிபதி இந்த மாத இறுதியில் உத்தியோகபூர்வமான விழா ஒன்றின் பின்னர் பதவியினை ஏற்கவுள்ளார்.

செச்சினியாவின் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் - 5, 05983 பேர் வாக்களித்துள்ளனர். இது வாக்களிக்கத் தகுதியானோரில் 85.25 சதவீதமாகும்.

## உலக சந்தையில் குறையும் ஆயுத விற்பனை

உலக சந்தையில் ஆயுத விற்பனை குறைந்துள்ளது. ஆனாலும் ஆயுத விற்பனைப் பட்டியலில் அமெரிக்கா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

உலக அளவில் ஆயுத விற்பனை 12 சதவீதம் குறைந்துள்ளது. 2002 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 914 கோடி அமெரிக்க டொலராக இருந்த ஆயுத விற்பனை, கடந்த ஆண்டு 2 இலட்சத்து 560 கோடி அமெரிக்க டொலராகக் குறைந்துவிட்டது. சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள்தான் அதிகளவில் ஆயுதங்களை வாங்கிக் குவித்துள்ளன.

பொருளாதார வீழ்ச்சி, அதனால் ஏற்பட்ட சிக்கன நடவடிக்கை ஆகியவை காரணமாக ஆயுத விற்பனை குறைந்தது. பணக்கார நாடுகள் இராணுவத்தை நவீனமயமாக்குவதில் கவனம் செலுத்தியதும் ஒரு காரணமாகும்.

வளரும் நாடுகள்தான் தொடர்ந்து ஆயுதக் குவிப்பில் கவனம் செலுத்தின. ஆயுத விற்பனையில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. அது ஆயிரத்து 450 கோடி அமெரிக்க டொலருக்கு ஆயுதங்களை விற்றுள்ளது. ஆயுத விற்பனையில் ரஷ்யா 2 ஆவது இடத்திலும், ஜெர்மனி 3 ஆவது இடத்திலும் உள்ளன.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதில் முதல் இடத்திலுள்ளது. ஆயிரத்து 570 கோடி அமெரிக்க டொலருக்கு அது ஆயுதங்களை வாங்கியுள்ளது. சீனா 2 ஆவது இடத்திலும், எகிப்து 3 ஆவது இடத்திலும் உள்ளன. இந்தியா ஆயிரத்து 260 கோடி அமெரிக்க டொலர் மதிப்புக்கு ஆயுதங்களை வாங்கி உள்ளது. பாகிஸ்தான் 10 ஆவது இடத்திலுள்ளது. அது 380 கோடி அமெரிக்க டொலருக்கு ஆயுதங்களை வாங்கியுள்ளது.

## கொல்லப்பட்டவர்களை நினைவுகூர்ந்து நேபாளத்தில் நேற்று தேசிய துக்கதினம்!




(காத்மண்டு)

ஈராக்கில் கடத்தப்பட்டபின் படுகொலை செய்யப்பட்ட 12 நேபாள பிரஜைகளையும் நினைவுகூரும் வகையில் நேபாளத்தில் நேற்று தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் அரச அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பன மூடப்பட்டதுடன் நேபாளத்தின் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது.

அத்துடன் நேபாள வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் தேச பக்திப் பாடல்கள் நேற்று முழுநாளும் ஒலி, ஒளிபரப்பப்பட்டன.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்



பெற்ற வன்செயல்களை அடுத்து காலவரையறையின்றி அமுல்செய்யப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை சிறிது நேரம் தளர்த்தப்பட்டது.

இதனையடுத்து நேற்றுக்காலை பொதுமக்கள் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டனர்.

ஈராக்கில் கொல்லப்பட்ட நேபாள பிரஜைகளின் குடும்பத்தினருக்கு தலா 14 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் நட்டஈடாக வழங்கப்படுமென நேபாள அரசு அறிவித்துள்ளது.

நேபாளத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் பதற்றநிலை காணப்பட்டதாக காத்மண்டுவிலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் சுசில் சர்மா தெரிவித்தார்.

இதேவேளை, பொதுமக்களை எவ்வித வன்முறைகளிலும் ஈடுபடாமல் அமைதியாக இருக்குமாறு நேபாள மன்னரும், பிரதமரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடந்த வன்முறைகளில் இருவர் கொல்லப்பட்டதுடன், பெருமளவு சொத்தழிவுகளும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழின உயிர்க் கொலை நாள் நாளை மறுநாள் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர் வரும் செப்ரெம்பர் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமிழின உயிர்க் கொலை நாள் நினைவு கூரப்படவுள்ளது.

அன்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண துக்க நாளாக அனுஷ்டிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மட்டக்களப்பு பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை மட்டக் களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தங்கள் வர்த்தக நிலையங்களை மூடியும், கல்வி நிலையங்களை பூட்டியும் வாகனப், போக்குவரத்துச் சேவையை இடை நிறுத்தி தமிழினப் படுகொலை நாளை அனுஷ்டிக்குமாறு கோரப் பட்டுள்ளது.

அதேதினம் வெள்ளை, கறுப்புக் கொடிகளை பறக்கவிடுமாறும் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

கடந்த 1990ஆம் ஆண்டு செப் ரெம்பர் 5 ஆம் திகதி வந்தாறு மூலை கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த பொது மக்களில் 158 பேர் படையினரால் கொலை செய்யப்பட்டனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச் சோலை, சத்துருக்கொண்டான், புல்லுமலை, மைலந்தனை, புதுக்குடியிருப்பு, சித் தாண்டி போன்ற பல்வேறு இடங் களில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட னர். இந்தப் படுகொலைகளின் நினை வாக செப்ரெம்பர் 5 ஆம் திகதி தமிழ் இனப்படுகொலை அனுஷ்டிக் கப்பட்டு வருகின்றது.

# முதல் தொகுதி பட்டதாரிகளுக்கு பயிற்சிகள் நேற்று ஆரம்பமாகின

அரச சேவைகளில் பட்டதாரி களை பயிலுனர்களாக இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையின் முதற் கட்டப் பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை 10.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்ட பத்தில் இடம்பெற்றது.

யாழ். அரச அதிபர் செ.பத்மநா தன தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழவில், மங்கள விளக்கை நாடாளு மன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, மா.க.ஈழவேந்தன், மேலதிக அரச அதிபர் சிவசுவாமி, வடமாகாண பிரதிக் கல்விப் பணிப் பாளர் திருமதி மகாலிங்கம், யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் விக் னேஸ்வரன், இளைஞர் சேவைகள் மன்ற இணைப்பாளர் பேரானந்தம் மற்றும் பட்டதாரிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து வரவேற்புரையை தட்சணாமூர்த்தி வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்கவின் செய் தியை இளைஞர் சேவைகள் மன் றத் தலைவர் தட்சணாமூர்த்தி வாசித்தார். இந்த நிகழ்வில் ஐநூ றிற்கும் மேற்பட்ட பட்டதாரிகளும், அரச அதிகாரிகளும் கலந்துகொண் டனர்.


பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங் கும் இந்தத் திட்டத்தின்கீழ் சண்டி லிப்பாய், சங்கானை பிரதேசங் களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்திலும்,

தெல்லிப்பளை, கோப்பாய் பிர தேசங்களைச் சேர்ந்த பட்டதாரிக ளுக்கான பயிற்சிகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும்,

உடுவில பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கான பயிற்சி கள் யாழ். இந்துக் கல்லூரியிலும்,

தீவகம் மற்றும் காரைநகர்ப் பிர தேச செயலகப் பிரிவு பட்டதாரிக ளுக்கான பயிற்சிகள் காரைநகர் பல.நோ.கூட்டுறவுச் சங்க மண்டபத் திலும்,

வடமராட்சி பிரதேச பட்டதாரிக ளுக்கான பயிற்சிகள் கரவெட்டி பிரதேசசபை மண்டபத்திலும் இடம் பெறுகின்றன.



நல்லைக் கந்தன் 13 ஆம் நாள் திருவீதியுலாக் காட்சி

# புலிகளால் மீட்கப்பட்ட சிறுவர்கள் ஐ.சி.ஆர்.சியிடம் நேற்று ஒப்படைப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் நேற றுக் காலை 9 மணியளவில் தமது அலுவலகத்தில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளி டம் ஆறு சிறுவர்களை ஒப்படைத் தார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பிலிருந்து தொழிலுக் காக அழைத்துவரப்பட்டு திருகோண மலை கல்லாறு எனுமிடத்தில் பெரும் பான்மை இனத்தவரின் மீன் வாடி யில் இவர்கள் தொழிலுக்காக அமர்த் தப்பட்டிருந்தனர்.

அங்கு வாடி நிர்வாகிகளால் பல் வேறு வதைகளுக்குள்ளான சிறுவர் கள் அங்கிருந்து 3 தினங்களுக்கு முன்னர் தப்பி ஓடி வந்தனர். காட்டுப் பகுதியில் ஒளிந்திருக்கும் போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களால் இவர்கள் அவர் களது முகாமுக்கு அழைத்துச் செல் லப்பட்டனர்.

தொழிலுக்கென்று அழைத்து வந்த நபர் தங்களை மொழிதெரி யாத ஓர் இடத்தில் வேலைக்காக அமர்த்தியிருந்தார் என்றும், அங்கு பலத்த கடினமான வேலைகளுக்கு தாங்கள் பணிக்கப்பட்டதாகவும் சந் தர்ப்பம் கிடைத்ததைப் பயன்படுத்தி தாங்கள் தப்பி வந்ததாகவும் இவர் கள் விடுதலைப் புலிகள் உறுப்பி னர்களிடம் தெரிவித்தனர்.

இந்த விடயம் உடனடியாக அரசி யற் துறைப் பொறுப்பாளரின் கவ னத்துக்குக் கொண்டுவரப்பட்டதை யடுத்து அவர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப் படுவதற்காக சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத்தினரி டம் ஒப்படைக்கப்பட்டனர்.

சிறுவர்களைக் கையளிக்கும் போது திருமலை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் எழிலன் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதி நிதிகளிடம் தெரிவிக்கையில்

சிறுவர்களை தொழிலுக்காக அமர்த்துவதைத் தவிர்க்கப்பட வேண் டும்.குடும்ப நிலைமை காரணமாக சிறுவர்கள் தொழில் தேடிச் செல்ல வேண்டியுள்ளது. இவர்களை பெற் றோரிடம் ஒப்படைக்கும் நீங்கள் இந் தச் சிறுவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக வேண் டிய உதவிகளைச் செய்ய வேண் டும்.

அத்துடன் சிறுவர்களை தொழல் செய்ய நிர்ப்பந்திப்பது தவிர்க்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண் டார். (04)

## யு.என்.எச்.சி.ஆர்...

நலன்புரி நிலையங்களில் வாழ் கின்றனர். எனவே - அவர்களுக் கான உதவிகளை யு.என்.எச்.சி.ஆர் வழங்கவேண்டுமென அரசியற்துறைப் பொறுப்பாளர் யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதியிடம் கோரிக்கை விடுத் தார்.

இந்தச் சந்திப்பில் - யு.என்.எச். சி.ஆரின் பிரதிநிதி 2005 ஆம் ஆண் டுக்கான தமது திட்டத்தை முன் வைத்து விடுதலைப் புலிகளின் ஆலோ சனையையும் கேட்டறிந்தார்.

இந்தத் திட்டத்தை வரவேற்ற அரசியற்துறைப் பொறுப்பாளர் யு. என்.எச்.சி.ஆர் தொடர்ந்தும் இடம் பெயர்ந்த மக்களுக்கான உதவி களை வழங்கவேண்டுமெனக் கேட் டுக்கொண்டார். நேற்றைய சந்திப் பில் - விடுதலைப் புலிகளின் சமா தானச் செயலகப் பணிப்பாளர் புலித் தேவனும் கலந்துகொண்டார்.

# திருமலையில் நேற்று ஹர்த்தால்...

போன்று இயங்கின. பொதுச் சந்தை மூடப்பட்டிருந்தது.

காலை 9.20 மணியளவில் கடற் படைத்தள வீதியில் சேமக்காலை மதில் ஓரமாக குண்டு ஒன்று வீசப் பட்டது. மக்களை அச்சுறுத்தும் வகையில் இது மேற்கொள்ளப் பட்டது.

மரத்தடி என்னும் இடத்திலும் இவ்வாறு ஒரு குண்டு போடப்பட் டது. இவற்றினால் எந்தச் சேதங்க ளும் ஏற்பட்டிருக்கவில்லை.

பிரதான வீதியில் அமைந்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைத்தொகுதியில் பின்புறமாக வைக்கப்பட்ட வெடிகுண்டு அணைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர், பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு பொலிஸாரும், இரா ணுவத்தினரும் ஸ்தலத்துக்கு வந்து வெடிகுண்டினை அகற்றினர்.

இதேவேளை - 10 மணியளவில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன் னால் கோமரங் கடவல என்னும் இடத்திலிருந்து அழைத்து வரப்பட்ட சுமார் 50 பேர் ஒன்றுகூடி விடுதலைப் புலிகளால் பிடித்துவைக்கப்பட்ட இரண்டு ஊர்காவற்படையினரையும் விடுவிக்க வேண்டும் எனக்கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

பின்னர் - 10.45 மணியளவில் இங்கிருந்து கடற்படை வீதி வழி யாக ஊர்வலமாகப் போர்நிறுத் தக்கண்காணிப்புக்குழு அலுவல கம் நோக்கிச் சென்று ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர். அலுவலகத் துக்குள் சென்ற ஆர்பாட்டக்காரர் கள் கண்காணிப்பாளர்கள் எவரும் வெளியேற முடியாதவாறு மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், கண்காணிப்புக்குழுவி னரின் நடவடிக்கை பாதிக்கப்பட்டன. நிலைமையைச் சமாளிக்க பெருந் தொகையான ஆயுதம் தாங்கிய பொலிஸார் கடமைக்கு அமர்த்தப் பட்டிருந்தனர்.

மாலை 7.30 மணியளவில் திரு கோணமலை பொலிஸ் அத்தியட் சகர் உபாலி ஹேவஹே விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து அவர் கள் கலைந்து சென்றனர். (10, 04)

# புலிகளுக்கும் மக்களுக்கும்....

யிட்டனர். அதன் பின்னர் கடற்புலிப் போராளி ஒருவரை அழைத்தவாறு அத்துமீறலில் ஈடுபட்ட இழுவைப் படகை நோக்கி படகில் மீனவர்கள் சென்றனர். அவ்வேளை இழுவைப் படகை நிறுத்தக் கேட்கப்பட்டபோது அவர் படகை நிறுத்த மறுத்துச் சென்றார்.

இதன்போது படகை நிறுத்த எச் சரிக்கைக்காக போராளி வேட்டைத் தீர்த்தபோது, தவறுதலாக இழுவைப் படகிலிருந்த மீன்பிடித் தொழிலாளி ஒருவரின் காலைத் தாக்கியுது. அத் துடன் படகின் டீசல் கொள்கலனில் ரவை பட்டு அது தீப்பிடித்தது.

உடனடியாக பாலாவி மீனவர்கள் தீயை அணைத்துக் காயமடைந்த வரைக் காப்பாற்றினர். இதில் காய மடைந்தவர் நடந்த சம்பவத்தின் உண்மைத் தன்மையையும், தம் தரப் புத்தவறையும் ஒப்புக்கொண்டார்.

ஆனால், இதைப் பயன்படுத்தி குருநகர் மக்களிடையே தேசவிரோத சக்திகளும், இராணுவ புலனாய்வு சக்திகளும் தமிழீழ விடுதலைப் புலி களையும், மக்களையும் பிளவுபடுத் தும் நோக்குடன் கொந்தளிப்பை ஏற்படுத்த முயன்றுள்ளனர்.

குருநகர் மக்களின் பெயரில் தேசவிரோத சக்திகள் துண்டுப் பிர சுரங்களை வெளியிட்டுக் குழப்பங்க ளை ஏற்படுத்தியுள்ளன எனத் தெரி விக்கப்படுகிறது.

இதில் நடந்த சம்பவம் பற்றி குருநகர் மீன்பிடித் தொழிலாளர் களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. இந்தச் சம்பவம் ஆழ்ந்த கவலை யளிக்கும் சம்பவம் என்றும், இப் படிப்பட்ட சம்பவங்களுக்கு இனி மேல் வாய்ப்பளிக்கக்கூடாது என்றும் கேணல் சூசை கேட்டுக்கொண்டார்.

இதனைப் பயன்படுத்தி தேச விரோத சக்திகள் குழப்பங்களை ஏற் படுத்தி விடுதலைப் புலிகளுக்கும், மக்களுக்கும் இடையே பிளவை உண்டாக்க மேற்கொள்ளும் முயற்சி களுக்கு இடமளிக்கக்கூடாது.

தொழில் ரீதியான பிணக்குக ளின் விளைவே இது. இந்தப் பிணக் குக் காரணமாக இழுவை மீன்பிடி இந்த ஆண்டுடன் முற்றாக நிறுத் தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அதுவரையான மூன்று மாதங்களுக்கு மீன்பிடித் தொழிலா ளர்களிடையே பிணக்குகள் ஏற்படாது ஒற்றுமையைப் பேண இரு தரப்பு மீனவர்களும் சம்மதம் தெரி வித்த துடன், இழுவை மீன்பிடித் தொழி லாளர்கள் வாரத்தில் வியாழன், ... ஆகிய இரு நாட்களில் மீன் பிடி... தற்குரியகடல் எல்லையை வரையறை செய்தனர். இரு தரப்பு மீனவர்களும் தெளிவடைந்து சென்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் அர சியல்துறைத்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ்.மாவட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர் சி.இளம் பரிதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## படம் பிடித்ததாக...

அவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

செலூலர் போன் ஒன்றில் பொருத தபபட்ட உயர் தொழில்நுட்பக் கமரா ஒன்றின் மூலமே, அவர் படங்கள் எடுத் ததாகக் கூறப்படுகிறது.

கைதான இளைஞர் மேலதிக விசாரணைக்காகக் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டார்.

## ஆசிரிய...

சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வும் இலங்கைப் பரீட்சைத் திணைக் களம் அறிவித்துள்ளது.

இந்தப் பெறுபேறுகள் யாவும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சிடம் வழங்கப்பட்டதும் அவை வெளியிடப்படும்.

கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் இந்தப் பெறுபேறுக ளைக் கையளிக்கும்போது எந்தெந் தத் துறைகளுக்கு, எத்தனை ஆசி ரியர்களை இணைப்பது எனக் குறிப் பிடுவார். அதன்படி நியமனங்கள் வழங்கப்படும் எனவும் அவர் தெரி வித்தார். (ப)

யாழ்ப்பாணத்தில் வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர் பயிற்சி நிலையம் M.M.I.C

3 மாத நேரடிப் பயிற்சிகள் செப்ரெம்பர் 4ம் திகதி ஆரம்பம்

மாணவர்கள் நேரில் வந்து பதிவுகளை மேற்கொள்ளலாம்

- அறிவிப்பு
- நிகழ்ச்சி தயாரித்தல்
- செய்தி வாசிப்பு
- கலையக நிர்வாகம்
- நேர்முக வர்ணனைகள்
- மேடை நிகழ்ச்சித் தொகுப்பு

Sept 4 புதிய பிரிவு ஆரம்பம்

இன்னும் ஒலிபரப்பு சம்பந்தமான சகல பயிற்சிகளும் எமது யாழ். கலையகத்தில் நேரடியாக இடம்பெறும்.

அரச, தனியார் வானொலி, தொலைக்காட்சிகளில் சேர்வதற்கு இப்பயிற்சி நெறி பேருதவியாக அமையும்.

தொடர்புகளுக்கு - M.M.I.C ஒலிபரப்புக் கல்லூரி இல:15, சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி வீதி, (மணியம் கட்டடம்), யாழ்ப்பாணம்.

தொலைபேசி ~ 0777 316258

(சி/3023)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.